பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (28-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:306

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டணி ஆதரித்து வாக்களிக்கும்!

### அதில் மறுபேச்சுக்கு இடமில்லை என்கிறார் ஜோசப் எம்.பி.

மட்டக்களப்பு,செப்.28

இந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படுமானால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தப் பிரேரணைக்கு ஆதரவாக நிச்சயம் வாக்களிப்பார்கள். அதில் வேறுபட்டு நிற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

- இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ரெலோவும், தமிழ்க் காங்கிரஸும் ஒப்பமிட, தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் அதற்கு மறுத்து வருவது குறித்து கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-



கடந்த ஏழு ஆண்டுகளாக ஈழத் தமிழருக்கு சொல்லொணாத் துயரத்தைக் கொடுத்து வரும் இந்த அரசு, ஆட்சியிலிருந்து அகற்றப்பட வேண்டியது.

அதனை அகற்றுவதற்கான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஒப்பமிடுவதற்கான அனுமதியை எமது கட்சியின் மத்தியகுழுவே வழங்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை: வெட்டுப்புள்ளி வெளியானது

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஐந்தாம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கான வெட்டுப்புள்ளி விவரம் நேற்று வெளியாகியது.

இந்தப் பரீட்சையின் முடிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியாகும் என்றும் - இந்தப் பரீட்சைக்கு சுமார் ஐந்து லட்சம் மாணவர்கள் தோற்றினர் என்றும் - பரீட்சை நடந்து இரண்டு வாரங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறை வெளியிட்டமை இம்முறை சிறப்பு அம்சம் என்றும் - பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.வி. அமரக் கோன் தெரிவித்தார்.

தமிழ் மொழிமூலம் தோற்றியவர்களின் வெட்டுப்புள்ளி விவரம் மாவட்ட ரீதியாக வருமாறு:-

| | |
|---|---|
| ☆ கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி,மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல், மட்டக்களப்பு, புத்தளம்,இரத்தினபுரி, கேகாலை | - 123 |
| ☆ வவுனியா | - 121 |
| ☆ அம்பாறை | - 121 |
| ☆ கிளிநொச்சி | - 120 |
| ☆ முல்லைத்தீவு | - 120 |
| ☆ யாழ்ப்பாணம் | - 118 |
| ☆ மன்னார் | - 117 |
| ☆ திருகோணமலை | - 117 |
| ☆ அனுராதபுரம் | - 114 |
| ☆ பொலனறுவை | - 113 |
| ☆ பதுளை | - 111 |
| ☆ நுவரெலியா | - 109 |
| ☆ மொனறாகலை | - 93 |
| ☆ அம்பாந்தோட்டை | - 90 |

# நம்பிக்கையில்லாப் பிரேரணை; ஐ.தே.க. இன்று சமர்ப்பிக்கிறது

## தமிழர் கூட்டணியின் ஒப்பமின்றியே

**கொழும்பு,செப்ரெம்பர்28**

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி இன்று காலை 10.30 மணிக்கு - சுபநேரத்தில் - நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கவிருக்கின்றது.**

**இந்தப் பிரேரணையில் ரெலோ, தமிழ்க்காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒப்பமிட்டுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி ஒப்பமிடவில்லை.**

ஐதே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐவர் கொண்ட குழு இந்தப் பிரேரணையை கையளிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

"நாட்டையும் மக்களையும் அழுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளை இந்த அரசினால் தீர்க்க முடியாது என்பது தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதால் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என இச்சபை பிரகடனம் செய்கிறது" - என்று ஆக ஒரு பந்தியில் மட்டும் இந்தப் பிரேரணை அமைந்துள்ளது.

இந்தப் பிரேரணையில் எதிரணியைச் சேர்ந்த 95 எம்.பிக்கள் ஒப்ப (12 ஆம் பக்கம் பார்க்க)

## கெற்பலியில் ஷெல்லுக்கு குடும்பஸ்தர் பலி!

தென்மராட்சி,செப்.28

மிருசுவில் கெற்பலிப் பகுதியில் நேற்றுமுனதினம் மாலை 6.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

தமது வீட்டின் முற்றத்தில் நின்ற சிதம்பரப்பிள்ளை சிவராசா (வயது 45) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கொடிகாமம் பொலிஸாரால் மந்திகை ஆஸ்பத்திரிக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்ட அவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணையை சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அபிரேம்சங்கர் நடத்தினார்.

கெற்பலி, விடத்தற்பளை, உசன், எழுதுமட்டுவாழ், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் அந்தப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

பாதுகாப்பான இடங்களை நோக்கி அவர்கள் அவசர,அவசரமாக இடம் பெயர்ந்தனர்.

(உ-3-31-109-117)

## வவுனியாவில் செவ்வாயன்று சிப்பாய் பலி!

கொழும்பு,செப்.28

வவுனியா வெடிவைத்தகல் பகுதியில் இராணுவத் தாக்குதல் அணியினர் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.40 மணியளவில் விடுதலைப் புலிகளின் அணி ஒன்றைக் கண்டு தாக்குதல் நடத்தியதாகவும் -

அப்போது இடம்பெற்ற மோதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன், மற்றொரு சிப்பாய் காயமடைந்து அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்றுத் தெரிவித்தது.(உ-ஒ)

## தலைவரின் மலரஞ்சலியுடன் சங்கரின் இறுதிக் கிரியைகள்

### முள்ளியவளையில் நேற்று நடந்தன

வவுனியா,செப்.28

ஒட்டுசுட்டானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கரின் இறுதிக்கிரியைகள், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மலர் வணக்கத்தைத் தொடர்ந்து பூரண இராணுவ மரியாதையுடன் நேற்று மாலை 5 மணிக்கு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## சங்கர் மீதான தாக்குதலை இராணுவம் மறுக்கின்றது.

கொழும்பு,செப்.28

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கேணல் சங்கர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று ஸ்ரீலங்கா இராணுவம் தெரிவித்துள்ளது.

தமது தாக்குதலைத் தீவிரப்படுத்துவதை நியாயப்படுத்துவதற்காக புலிகள் வெளியிட்ட சதித் திட்ட அறிவிப்பாக இது இருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்திருக்கிறார்.

'இந்தச் சம்பவத்துக்கும் எமக்கும் எந்தத் தொடர்புமில்லை. இத்தகைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் சில பகுதிகளில் மீன்பிடிக்க இன்றுமுதல் அனுமதி

தென்மராட்சி,செப்.28

வடமராட்சியில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு இன்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை படையணி அலுவலகத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வழமையான கட்டுப்பாடுகளுடன் ஐந்நூறு மீற்றர் தூரம் வரையே (12 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் 9 பேர் காயம்

கொழும்பு,செப்.28

காலி, ஹிங்கொடைப் பகுதியில் இரண்டு பஸ்கள் நேற்றுக் காலை மோதியதில் அவற்றில் பயணம் செய்த 9 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர். (உ-10)

## அரச ஊழியர்களுக்கு இடைக்காலப் படி?

கொழும்பு,செப்.28

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து அரசு ஆலோசித்து வருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொது சேவைகள், தொழிற்சங்கங்கள் சம்பளக் கட்டளைச் சபையின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக, அரச ஊழியர்களுக்கு இடைக்காலப் படிகள் வழங்கப்படவேண்டும் என்று கோரியுள்ளதாகவும் -

இந்தக் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்தி முடிவு செய்வதாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்ததாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நேற்று இடம் பெற்ற சந்திப்பிலேயே பிரதமர் இவ்வாறு கூறியதாகவும் இணையத் தளச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (ஒ)

## நாகர்கோயிலில் 2 சிப்பாய்கள் புலிகளின் ஷெல்லுக்குப் பலி!

கொழும்பு.செப்.28

நாகர்கோயில் மற்றும் முகமாலைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேறகொண்ட ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதலில் படையினர் இருவர் உயிரிழந்தனர்; ஒன்பது பேர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் நாற்பது நிமிடங்கள் தொடர்ந்ததாகவும் - படையினர் பதில் தாக்குதல் நடத்தி தாக்குதலை முறியடித்ததாகவும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

அதேதினம் காலை 9.45 மணியளவில் ரோந்து சென்ற படையினர் விடுதலைப் புலிகளின் பதுங்குகுழியையும் கிடுகால் அமைக்கப்பட்ட குடிசைகளையும் அழித்ததாகவும் தகவல் நிலையம் குறிப்பிட்டது.

(உ-3)

## விமானப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி!

### சேவைகள் குறைக்கப்படலாம்

யாழ்ப்பாணம்,செப்.28

பலாலி - இரத்மலானை விமான சேவையில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதை அடுத்து -

சேவைகளைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று 'ஹெலி டூர்ஸ்' நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து வாரத்தில் மூன்று தினங்கள் மூன்று சேவைகளையும் - ஏனைய தினங்களில் இரு சேவைகளையும் - நடத்தி வருகிறோம்.

கடந்த சில தினங்களாக பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதால் சேவைகளைக் குறைப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றோம்.

எதிர்வரும் 5 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் சேவைக்கு வெற்றிடங்கள் உள்ளன. விரும்பியவர்கள் பயணச்சீட்டைக் கொள்வனவு செய்யலாம் - என்றார் அவர்.

(உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

குருநகர் கொல்களத்தில்

# மாடுகளை பரிசோதித்து வெட்டும் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை

## யாழ். மாநகர முதல்வருக்கு முறையீடு

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ். மாநகரசபையினால் நிர்வகிக்கப்படும் குருநகர் கொல்களத்தில் 24 மணித்தியாலங்கள் மாடுகளைக் கட்டி வைத்து பரிசோதித்து வெட்டும் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என்று யாழ். மாவட்ட பசு இனவதை தடுப்புப் பாதுகாப்புச் சங்கம் யாழ்மாநகரசபை முதல்வருக்கு முறையிட்டு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 13 ஆம் திகதி காலில் காயப்பட்ட பசுமாடு ஒன்று குருநகர் கொல்களத்தில் வெட்டப்பட்டு, குருநகரில் உள்ள இறைச்சிக்கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து சந்தை மேற்பார்வையாளரால் தங்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிருகவைத்தியரின் அனுமதியுடனே மேற்படி பசுமாடு வெட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

இதற்கிடையில், குருநகர் கொல்களத்திற்கான பொதுச் சுகாதார பரிசோதகர் இவ்வாறு வெட்டப்பட்ட மாடு, காளைமாடு என்று பற்றுச்சீட்டு கொடுத்துள்ளார். இவை எல்லாம் ஊழல் தலைதூக்கியுள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

கடந்த 2ஆம் திகதி போயா தினமாகும். ஆனால் இறைச்சிக்கடை உரிமையாளர்களின் உதவியுடனும், கொல்கள ஊழியர்களின் அனுசரணையுடனும் குருநகர்ப் பகுதியில் இறைச்சி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் விசனத்தை ஏற்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. இத்தகைய ஊழல் நடவடிக்கைகள் தொடர்பாக முன்னரும் தங்களின் கவனத்திற்கு அறிவித்திருந்தோம். எனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை -

என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

# சேவைக்கால செயலமர்வுகள்

சாவகச்சேரி,செப்.28

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்கால செயலமர்வுகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

இந்த செயலமர்வுகளில் -

நாளை சனிக்கிழமை, இராமநாதன் கல்லூரியில், தரம் 8-11க்கான சமய பாடம் -

அடுத்த மாதம் 2ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 7-11க்கான விஞ்ஞான பாட செயல்முறை மற்றும் தரம் 10-11க்கான மனைப்பொருளியல் -

ஒக்ரோபர் 7ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில தரம் 10-11க்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு, தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, வணிகக் கல்வி -

ஒக்ரோபர் 13ஆம் திகதி தரம் 10-11க்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு ஆங்கிலம் -

ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் செயலமர்வுகள் இடம்பெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-31)


5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
பரீட்சை முடிவுகள்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்
ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி18429)



G.C.E.(O/L)-2001
மாதிரிப் பரீட்சை - 01
02-10-2001 செவ்வாய்
தனியார் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகளிடமிருந்து
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. (92749)
சுந்தர் வெளியீடு 38, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.



யாழ். மத்திய கல்லூரி அதிபர்
உயர்திரு.க.இராசதுரை
அவர்கள் 54ஆவது பிறந்தநாள் மகிழ்வில்
(28-09-2001) கல்லூரி சமூகத்தினரின்
மனமுவந்த வாழ்த்துக்கள்.



கல்வி கலை ஞானக் கடமை நிமிர்வோடெமது
பள்ளியுயர் பதவிப் பணியில் அனுதினமும்
உள்ளங்கலந்திர்! உயர்வீர்! - இத்திருநாள் போல்
என்றும் மகிழ இறை அருளோடு எம் வாழ்த்து!

பிரதி அதிபர், உப அதிபர்கள்,
ஆசிரியர்கள், ஆளணியினர்,
மாணவர்கள்.
(92722)


## மாவனல்லையில் இரு கடைகள் எரிந்து நாசம்

கொழும்பு,செப்.28

மாவனல்லை, ஹெம்மாத்தகம வீதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு கடைகள் முற்றாக சேதமடைந்தன.

இவ்வீதியிலிருந்த கடையொன்று அதிகாலை 2.00 மணியளவில் தீ பிடித்ததால் அதனோடு இணைந்த மற்றொரு கடையும் தீயில் எரிந்து நாசமாகியது.

அயலவர்கள் தீயை அணைப்பதற்கு முயற்சி எடுத்தபோதும் அம் முயற்சி முழுமையாக வெற்றியளிக்கவில்லை.

மாவனல்லையில் இம்மாதம் தொடக்கத்திலும் இரண்டு கடைகள் நள்ளிரவில் தீக்கிரையாகின என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கோடரிவெட்டில் முடிந்த வாய்த் தர்க்கம்

யாழ்ப்பாணம்,செப்.28

இரு சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு முடிவில் கோடரி வெட்டில் முடிந்த சம்பவம் உருப்பிராயில் இடம்பெற்றது.

உரும்பிராயில் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எலியாசு பொன்ராசு (வயது 48) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே தலையில் கோடரி வெட்டுக்கு இலக்காகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது தம்பியாரே அவர் மீது கோடரியால் வெட்டியதாகக் கூறப்படுகிறது. (ஒ-9-ரி)

## பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்.முற்றவெளிக்கு அண்மையாக கே.கே.எஸ் வீதிக்கு இடமாற்றப்பட்டிருப்பதால் பயணிகள் மழையில் நனைந்து பெருமளவு சிரமங்களை எதிர்நோக்குவது காண முடிகிறது.

பணயிகள் தங்கி நிற்பதற்கு இப் பகுதியில் எந்த வித வசதிகளும் செய்யப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதேவேளை தற்போது புனரமைக்கப்பட்டுவரும் யாழ்.மத்திய பஸ நிலையத்தின் திருத்தவேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (க-4-17)

## விதை உற்பத்திக்கு 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி உள்ளூரிலேயே, தரமான விதைகளை உற்பத்திசெய்வதற்கு பதினைந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விதை உற்பத்திக்காக உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்துக்கு இந்த நிதி ஒதுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விவசாயிகள் கூட்டத்தில் கூறியதாகவும் - அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## காங்கேசன்துறையில் இருவர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

காங்கேசன்துறைத் தடுப்புமுகாமில் இருவர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக நேற்றுமுன்தினம் அங்கு சென்று திரும்பிய மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூதூர் கூனித்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவனேஸ்வரன் என்ற இளைஞரும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவனான சாந்திராஜ் டிரோசன் (வயது 18) என்பவருமே அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பவராவர். (ஐ-4-ரி)

## செய்முறை பரீட்சை

தென்மராட்சி,செப்.28

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கான மனையியல், சங்கீதம், நடனம், விவசாயம், உடற்கல்வி ஆகிய பாடங்களின் செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (க-117)

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு லொறிகள் மூலம் உணவுப்பொருள்

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் பிரதேசங்களுக்கு 49 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 11 லொறிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 24 லொறிகளிலும் மன்னார் மாவட்டத்துக்கு 14 லொறிகளிலும் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

இதேவேளை கடந்தவாரம் 103 நோயாளர்கள் உட்பட 146 பேர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வவுனியாவுக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரத்து 400 பொதுமக்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலிருந்து வவுனியாவுக்கும் -

ஆயிரத்து 400 பொதுமக்கள் வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் சென்றதாகவும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (ஒ-10)

## கண்ணீர் அஞ்சலி



### பெரியதம்பி செல்வநாயகம்

27-09-2001 அன்று காலமாகிய பெரியதம்பி செல்வநாயகம் அவர்களின் குடும்பத்தினருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (92753) - நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### பெரியதம்பி செல்வநாயகம்

வண்ணார்பண்ணை, 138, சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த பெரியதம்பி செல்வநாயகம் அவர்கள் நேற்று (27-09-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கோகிலாதேவி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), யமுனாதேவி (இலங்கை வங்கி 2 ஆம் கிளை யாழ்.), கிருபாகரன் (விலை மதிப்பீட்டுத் திணைக்களம் - கொழும்பு), சாந்தினி, மாலினி (யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவராசா (கிராமசேவகர்) இராசநாயகம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜெயசிங்கம் (ப.நோ.கூ.சங்கம்), ரேவதி (நூலகர் - மட்டுவில் மகாவித்தி.) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ஜனந்தன், ஜனந்தினி, பவித்திரா, ஜதுர்ஷன், கஜானனன், கஜபன், கஜப்பிரியன், ஷனுப்பிரியன் ஆகியோரின் ஆசைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-09-2001) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*138, சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.கிருபாகரன்
(மகன்)
(92750)

### திருமதி சேனாதிராசா நாகேஸ்வரி

சங்கானை மருத்துவமனை வீதி (மாலியாவத்தை)யினை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சேனாதிராசா நாகேஸ்வரி நேற்று (27.09.2001) வியாழக்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் அரியபுத்திரர் சேனாதிராசா (காகிதாதி இறக்குமதியாளரும் விற்பனையாளரும்) அவர்களின் பாசமிகு மனைவியும் அப்புத்துரை காலஞ்சென்ற தங்கமணி தம்பதிகளின் அருமைப்புதல்வியும், பிரபாகரன் (லண்டன்), கருணாகரன் (கனடா), சுதாகரன் (உரிமையாளர், சண் பேப்பர் மாட், கொழும்பு), சுவர்ணகௌரி (மாணவி, யாழ்/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனலோஜினியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2001) வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*மாலியவத்தை,*
*சங்கானை.*

தகவல்:
அ.சேனாதிராசா
(கணவர்)
(92752)

### சுந்தரம் பாலசிங்கம்

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் பாலசிங்கம் (நெல்லியடி N.S.R.ஊழியர்) நேற்று (27.09.2001) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - அம்பிகை தம்பதியினரின் மகனும், தெய்வேந்திரம் - லீலாவதி தம்பதியினரின் மருமகனும், ரயினாவின் கணவரும், திறேகா, டிலக்சன், கலைக்லி ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*மூத்தவிநாயகர் கோயிலடி,*
*கரணவாய் வடக்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(சி18430)



கடந்த 11 ஆம் திகதி கடத்தப்பட்ட விமானங்கள் மூலம் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தி தரைமட்டமாக்கிய உலக வர்த்தக மையக் கட்டடத்தின் இடிபாடுகள் இன்னமும் அகற்றப்பட்டு வருகின்றன. மலைபோல் குவிந்துள்ள, இன்னும் அகற்றப்படாத இடிபாடுகளை முதலாவது படத்தற்காணலாம்.

நீண்ட நாள்களாகத் தொடரும் இந்த மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் மிகவும் களைப்படைந்து போயுள்ளனர். அவ்வாறு களைப்படைந்த பணியாளர்கள் சிலரும், இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடும் மோப்பநாயொன்றும் இடிபாடுகளுக்கருகிலேயே ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதையும், பணியாளர் ஒருவர் வாகனத்தின்மீது சரிந்தவாறு தனது அன்றைய தூக்கத்தை நிறைவு செய்வதையும் அடுத்துள்ள படங்களிற்காணலாம். இவர்கள் அனைவரும் ஒருசில நிமிட ஓய்வுக்குப் பின்னர் தமது கடமைகளுக்கு மீள வேண்டிய இக்கட்டு நிலையில் உள்ளனர்.

### வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில்

# நிரந்தர யுத்த நிறுத்தம் செய்ய இஸ்ரேல் — பலஸ்தீனம் இணக்கம்

ஜெருசலேம்,செப்.28

கடந்த ஒரு வருடமாக மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு இஸ்ரேலும் பலஸ்தீனமும் இணங்கியுள்ளன.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸூம் பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத்தும் ஜெருசலேமில் நேரில் சந்தித்து நடத்திய பேச்சுக்களின் போது இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் முழுமையான பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளவும் இரு தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் கடும் அழுத்தம் காரணமாகவே இரு நாடுகளும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரும் விடயத்தில் இணக்கத்துக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அரபு நாடுகளின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடனேயே அமெரிக்கா மத்திய கிழக்கு விடயத்தில் அதிக அக்கறை எடுத்து, அங்கு தற்காலிக அமைதி ஒன்றை ஏற்படுத்த விரும்புகின்றது என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம-7)

# இந்திய விமானங்களில் இனி விசேட படையினரும் பயணம்

அமெரிக்காவில் உலக வர்த்தக மையக் கட்டடம் மற்றும் பென்டகன் ஆகியவற்றின் மீது தீவிரவாதிகள் விமானங்களைக் கடத்தித் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்தியாவில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் விமானங்கள் அனைத்திலும் விசேட பயிற்சி பெற்ற படையினர் பயணம் செய்ய உள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கும் நாட்டின் வடகிழக்கு மாநிலங்களுக்கும் சென்று வரும் விமானங்களில் ஏற்கனவே இத்தகைய விசேட பயிற்சி பெற்ற படையினர் ஆயுதங்களுடன் பயணம் செய்துவருகின்றனர்.

அதனை, அனைத்துச் சேவைகளுக்கும் விரிவாக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அத்துடன் விமானியின் அறைக்கும் பயணிகளின் இடத்துக்கும் இடையிலான கதவுகள் மூடப்பட்டிருப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் -

பயணிகளும் அவர்களது பொதிகளும் தீவிரமாகச் சோதிக்கப்படும் என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7)

# ஆப்கனில் உள்ள அமெ.தூதரகம் தீயிட்டு எரிக்கப்பட்டது!

காபூல்,செப்.28

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் ஒரு பகுதியை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டு எரித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கில் திரண்டு வந்த ஆர்ப்பாட்டக் காரர்கள், தூதரகத்தின் முன்பாக நின்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷின் கொடும் பாவியை எரித்ததுடன் அமெரிக்கத் தேசியக் கொடியையும் கிளித்து எறிந்தனர்.

பின்னர் தூதரகத்தைக் கற்கலால் தாக்கி, தீ மூட்டி எரித்தனர். இதனால் தூதரகத்தின் ஒரு பகுதி பலத்த சேதமடைந்தது.

கடந்த 14 ஆண்டுகளாக அமெரிக்கத் தூதரகத்தின் இந்தக் கட்டடத்தில் அமெரிக்கர்கள் எவரும் பணியாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தலைநகர் காபூலில் உள்ள ஐ.நா.அலுவலகம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கத் தூதரகம் தீயிட்டு எரிக்கப்பட்டதை வெளிநாட்டு தனியார் தொலைக்காட்சி ஒன்று படமெடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதற்கிடையில் -

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் குறைந்துள்ளமையால் தமது இடங்களை விட்டு வெளியேறிய மக்களைச் சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமர் தெரிவித்துள்ளார்.

தலிபான்கள்மீதோ ஆப்கானிஸ்தான்மீதோ தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்காவிடம் காரணமோ, நியாயமோ, சான்றோ கிடையவே கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார். (ம-7)

# நிலக்கரி சுரங்க விபத்தில் 12 தொழிலாளர்கள் பலி!

புதுடில்லி,செப்.28

இந்தியாவின் யார்க்கண்ட் மாநில தோடா மாவட்டத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் அதனுள் பணியில் ஈடுபட்டிருந்த 12 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கைவிடப்பட்ட அந்தச் சுரங்கத்தில் சட்டவிரோதமான முறையில் நிலக்கரி அகழ்ந்து கொண்டிருந்த போது, சுரங்கத்தின் உட்சுவர்கள் இடிந்து வீழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

உயிரிழந்தவர்களில் 8பேர் பெண்களாவர். சுரங்கத்தில் இருந்து இறந்தவர்களின் சடலங்களை வெளியே எடுப்பதற்கு அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7)

# ஒஸாமா பின்லேடன் செச்சினியாவில்?

நியூயோர்க்,செப்.28

"அமெரிக்காவால் சர்வதேசப் பயங்கரவாதி என வர்ணிக்கப்படும் ஒஸாமா பின்லேடனும் அவரது முக்கிய சகாக்கள் சிலரும் செச்சினியாவுக்கு தப்பிச் சென்று விட்டதாகத் தெரிகின்றது.

- இவ்வாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்துள்ளார்.

வாஷிங்ரனில் செய்தியாளர்களிடம் பேசும்போது புஷ் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் பின்லேடனின் அல்கைதா அமைப்புக்கு எதிராகவே முதற்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அல்கைதா உறுப்பினர்கள் பலர் செச்சினியாவில் இருப்பதாக நான் கருதுகின்றேன் என்றார். (ம)

### இந்திய விமானம் விபத்தில்

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ.வி-21 ரக போர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தின் ஒதுக்குப்புறமான கிராமத்தில் பல வீடுகளை இடித்துக்கொண்டு விமானம் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானி உயிர் தப்பிவிட்டார். ஆனால் விமானம் வீடுகளின் மேல் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார். (ம-7)

### உலக அரங்கில்

# பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய நிறுவனங்களின் சொத்துகள் முடக்கம்

## பாகிஸ்தான் மத்திய வங்கி உத்தரவு

இஸ்லாமாபாத்,செப்.28

பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவை எனக் கருதப்படும் உள்ளூர் நிறுவனங்களின் சொத்துக்களை முடக்குமாறு பாகிஸ்தான் மத்திய வங்கி உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷால் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அமைப்புகள் தனிநபர்களின் 27 பெயர்கள் அடங்கிய பட்டியலில் உள்ள நபர்களுடனோ, அமைப்புகளுடனோ தொடர்புடைய உள்ளூர் நிறுவனங்களின் சொத்துக்களே முடக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளையும் மூடிவிடுமாறு மத்திய வங்கி உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசின் இந்தத் திடீர் நடவடிக்கை உள்ளூர் மக்களிடம் அதற்குக் கடும் எதிர்ப்பை உண்டாக்கும் என்று கருதப்படுகின்றது. (ம-7)

# மத்திய ஆசியாவில் அமெரிக்கா அதிகாரத்தை பரப்ப முயல்கிறது

### ஈரானின் ஆன்மீகத் தலைவர் குற்றச்சாட்டு

தெஹ்ரான்,செப்.28

தற்போதைய நெருக்கடிகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, மத்திய ஆசிய பிரதேசத்தில் அமெரிக்கா தனது ஆதிக்கத்தைப் பரப்பி நிலைநிறுத்த முயற்சிக்கின்றது -

இவ்வாறு ஈரானின் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்துல்லா அலி கொமேனி தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய கூட்டணி ஒன்றுக்கு தலைமை தாங்கி வழிநடத்தும் ஆற்றலோ, திறமையோ அமெரிக்காவுக்குக் கிடைக்காது.

ஆப்கானிஸ்தான் மீது, அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதற்கு ஈரான் ஆதரவு அளிக்காது - என்றார். (ம)

# தேர்தலன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க பங்களாதேஷ் பழங்குடி மக்கள் அழைப்பு

டாக்கா,செப்.28

பங்களாதேஷில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் தினமான எதிர்வரும் திங்கட்கிழமையன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி சிட்டகொங் மலைப்பகுதி மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதனையடுத்து, பங்களாதேஷில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே தேர்தலையொட்டி பங்களாதேஷில் அரசியல் வன்முறைகள் பெருமளவு இடம்பெற்று வரும் வேளையில், இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பு மேலும் வன்முறை பரவ வழிவகுக்கும் என இடைக்கால அரசு கருதுகின்றது.

சிட்டகிராங் ஜனசங்கதி சமித்தி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில்- பொதுத் தேர்தல்களை எதிர்த்து மலைப் பிரதேச மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் என்பவற்றை நடத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழங்குடி மக்களின் இந்த முடிவினால் மோசமடைந்துள்ள நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, தேர்தல்கள் அமைதியாக இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக மேலதிக படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

# கல்முனை நகரில் புதனன்று 'தபால் குண்டு' வெடிப்பு

## இரு பொலிஸார் உட்பட மூவர் காயம்

கல்முனை நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருந்த சமயத்தில் கல்முனை பொலீஸ் நிலையத்தில் தபால் குண்டு ஒன்று வெடித்ததில் இரு பொலீஸார் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

புதன்கிழமை காலைமுதல் நகரில் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன் கல்முனை நகர் பொதுச் சந்தைப் பகுதிகளில் பதற்றமும், பரபரப்புமான நிலைமை காணப்பட்டது.

கல்முனை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும், வீதியோரங்களிலும், பொதுச் சந்தைப் பகுதியிலும் வாகனங்களை நிறுத்த வேண்டாமெனப் பொலிஸார் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுத்ததால் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் கல்முனை நகர் மற்றும் பொதுச் சந்தைக்கு வந்த பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனர்.

கல்முனை பழைய பஸ் நிலையப் பகுதியிலேயே வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டவண்ணமிருந்தன.

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபன் உண்ணாவிரதமிருந்து மரணமான 14 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று விடுதலைப் புலிகளால் அனுஷ்டிக்கப்பட்டதையொட்டியே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்பாதுகாப்புக் கெடுபிடிகள் கல்முனை நகரைப் பரபரப்புக்குள்ளாக்கின.

இந்தப் பரபரப்பான நிலைமையில் நண்பகல் 11.30 மணியளவில் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்த தபால் குண்டு ஒன்று வெடித்ததில் கல்முனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் றசீத்தும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், சிவிலியன் ஒருவரும் படுகாயமடைந்து கல்முனை தெற்கு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு மேலதிக அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

(க)

# இரு தபாலக ஊழியர் கைது!

அம்பாறை, செப். 28

கல்முனை பிரதம தபாலகத்தில்நேற்றுமுன்தினம்இடம்பெற்ற தபால் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தபாலக ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அஞ்சல் அலுவலரான கே. செல்வராஜா, அலுவலக உதவியாளரான ஆர். ரவீந்திரன் ஆகிய இருவருமே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் கைதை ஆட்சேபித்து கல்முனை தபாலக பணியாளர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தபாலகம் மூடப்பட்டிருந்தது.

இதேவேளை —

கிழக்கு மாகாண பிரதித் தபால் மா அதிபர் ஏ. ஆர். துரைராஜா நேற்று கல்முனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு இந்த ஊழியர்களை விடுவிப்பது தொடர்பாகப் பேச்சு நடத்தினார்.

(ஐ-14)

# தபாற் பொதிகள் நேற்று வந்தன

யாழ்ப்பாணம், செப். 28

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் நேற்று வடபகுதிக்கான சுமார் 282 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் இங்கிருந்து 55 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன. (க-15)

# விதைநெல் கையிருப்பில்!

யாழ்ப்பாணம், செப். 28

கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் அண்மையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 2 ஆயிரத்து 900 புசல் விதை நெல்லில், ஆயிரத்து 200 புசல் விதைநெல் கையிருப்பில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதற்கென முற்பணம் செலுத்தியோர் அதனைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் விதை நெல் தேவையான விவசாயிகள் எவரும் தமது பகுதி கமநல கேந்திர நிலையங்களூடாகத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

(க-10-ரி)

# விபத்தில் படுகாயம்

தென்மராட்சி, செப். 28

மந்திகைச் சந்தியில் இடம்பெற்ற 'பிக்கப்' வாகனம்—மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி பலத்த காயங்களுக்கு உள்ளான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

புலோலி தெற்கு கிராமக் கோட்டடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுரேந்திரன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-117)


# கண்ணீர் அஞ்சலி

யாழ். பொதுசன நூலகத்தில் பணியாற்றும்

திரு. ந. பரமேஸ்வரனின் அன்புத் தாயார்

## திருமதி இராஜேஸ்வரி நவரத்தினஐயர்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு, கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ். பொதுசன நூலகப் பணியாளர்கள்.

யாழ். மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(92727)


# கராத்தே கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப் 28

யாழ். செயலக விளையாட்டு அதிகாரி அலுவலகத்தில் பதிவுசெய்துகொண்ட கராத்தே கழகங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலக விளையாட்டு அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட ரீதியிலான கராத்தே சங்கம் அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்படவிருப்பதால் பதிவு செய்த அனைத்துக் கராத்தேக் கழகங்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார்.

(க-4)

# குடிதண்ணீர் விநியோகத்தில் தாமதம் ஏற்படும்

யாழ்ப்பாணம், செப். 28

அல்லைப்பிட்டியில் இருந்து ஊர்காவற்றுறை வரை செல்லும் குடிதண்ணீர்க் குழாயில் இன்று வெள்ளிக்கிழமை திருத்தவேலை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் —

எனவே நாளை சனிக்கிழமை ஊர்காவற்றுறைப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்தில் தாமதம் ஏற்படலாம் என்றும் —

தேசியநீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை —

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள பிரதான நீர்க் கம்பங்களில் இருந்து குடிதண்ணீர் பெறுவோர் தமக்குரிய கட்டணங்களை எதிர் வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் நூலகத்தின் மேல் மாடியிலுள்ள கருமபீடத்தில் செலுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

கட்டணம் செலுத்தத் தவறின் நீர்விநியோகத்தை துண்டிக்க வேண்டியநிலை ஏற்படலாம் என்றும் — அவர் அறிவித்துள்ளார்.

(க-7)

# கசிப்பு விற்ற 5 பேருக்கு அபராதம்

பல்வேறு கசிப்பு வழக்குகள் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ. த. விக்னராஜா நேற்று முன்தினம் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளார்.

கொக்குவில் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த சைமன் சைலேஸ்வரன் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபாவும்—

திருநெல்வேலி இராமநாதன் வீதி, மிலேனியம் ரெஸ்ரோறன்ட் என்ற முகவரியைச் சேர்ந்த சண்முகநாதன் சதானந்தன் என்பவருக்கு ஆயிரம் ரூபவும்—

திருநெல்வேலி கிழக்கு வளாக வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் சுப்பிரமணியம் என்பவருக்கு ஆயிரம் ரூபாவும்—

யாழ்ப்பாணம், மடத்தடி வீதியைச் சேர்ந்த சாந்தலிங்கம் பிரபாகரன் என்பவருக்கு ஆயிரம் ரூபாவும்—

குருநகர் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் ராஜகுலேந்திரன் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் -- தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்கள் ஐவரும் இருபாலை சிறுவர் பாதுகாப்பு நிலையத்துக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் தர்மப் பணம் செலுத்த வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (க-4)

# ஏழாலை இளைஞர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

ஏழாலையில் கடந்த 20 ஆம் திகதி பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுக் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ. த. விக்னராஜாவினால் விடுவிக்கப்பட்டார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த சந்திரசேகரம் சுதர்சன் என்பவரே விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

இவரைக் கைது செய்த பொலீஸார் இவரது கைது தொடர்பாகக் கடந்த 23 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவித்ததையடுத்து அடுத்து வரும் 72மணித்தியாலங்களுக்குள் சந்தேக நபரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு நீதிவான் பணித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் புதன்கிழமை. குறித்த சந்தேகநபர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்தக் கைது குறித்து விசாரித்த நீதிவான் இ. த. விக்னராஜா இவரை விடுதலை செய்யுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(க-4-ரி-117)

# குடாநாட்டில் 216.1 மி. மீற்றர் மழை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்.குடாநாட்டில் கடந்த செவ்வாய்கிழமை216.1மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலியில் அமைந்துள்ள வானிலை அவதான நிலையத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணி தொடக்கம் காலை 9 மணி வரைக்கும் 52.7 மில்லி மீற்றர் மழையும் —

செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணி வரையான 24 மணி நேரத்தில் 216.1 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளதாக பதிவுகள் தெரிவிக்கின்றன.

(க-10-ரி)

# முன்பள்ளி ஆசிரியர்களின் கவனத்துக்கு!

தென்மராட்சி, செப். 28

பளைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக்குக் கொடுப்பனவு வழங்க பிரதேச செயலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச முன்பள்ளி ஆசிரியைகள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்திற்கு எதிர் வரும் 5 ஆம் திகதி வருகை தந்து சனசமூக அபிவிருத்தி அலுவலரிடம் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(க-117)

# பருத்தித்துறையில் ஒரே இரவில் 3 வீடுகளில் திருடர் கைவரிசை

யாழ்ப்பாணம், செப். 28

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவும் மூன்று வீடுகளில் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஜன்னல் கம்பியை வளைத்து உடைத்து வீட்டினுள் புகுந்தே திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

பருத்தித்துறை கார்த்திகேசர் வீதியில் ஆசிரியை ஒருவரின் வீட்டில் நுழைந்து சங்கிலி மற்றும் பொருள்களும், விநாயக முதலியார் வீதியில் ஒரு வீட்டில் சங்கிலியும் திருடப்பட்டுள்ளன.

மூன்றாவதாக மணியா ஒடை ஒழுங்கையில் திருட எடுக்கப்பட்டமுயற்சிதோல்வியுற்றது.

இந்த வீட்டின் ஜன்னலை உடைத்த வேளை அயல் வீட்டு நாய் குரைத்ததை அடுத்து அயல் வீட்டுக்காரர் மின் விளக்குகளைப் போட்டு ஆரவாரப்பட்டதில்திருடர்கள் முயற்சி கைநழுவிப் போய் விட்டது. ஜன்னலை உடைத்த நிலையில் திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

விடிந்து பார்த்த போதே ஜன்னல் உடைக்கப்பட்ட விடயம் தெரியவந்தது,

இத்திருட்டுக்கள் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, (க-15)

# அரியாலை உபதபாலகம்

அரியாலை, செப். 28

அரியாலை உபதபாலகம் தற்போது கச்சேரி — நல்லூர் வீதியில் இயங்கி வருகின்றது.

இந்த தபாலகம் முன்னர் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

(க-17)

# 'வணிகஒளி' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், செப், 28

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் 'வணிக ஒளி' மலர் வெளியீட்டு விழாவும், வணிக தின விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் ம. மோகனரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வணிகவியல்துறை விரிவுரையாளர் க. சிவராஜாவும் கலந்துகொள்வர்.

(க-4)

# கட்டாக்காலி நாய்களால் பெரும்தொல்லை

யாழ்ப்பாணம், செப். 28

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கட்டாக்காலி நாய்கள், விசர் நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதால் அப்பகுதி மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

இப்பிரிவுக்கு உட்பட்ட இரு இடங்களில் விசர் நாய்க்கடிக்கிலக்கான இருவர் இம்மாதம் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி புத்தூர் மேற்கைச் சேர்ந்த சேனாதிராசா சதாசிவம் (வயது 60) என்பவரும், 11 ஆம் திகதி கோண்டாவில் கிழக்கில் ஏ. ஞானசேகரம் (வயது 14) என்பவரும் விசர் நாய்க்கடி நோயினால், யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்துள்ளனர்.

புத்தூர் கிழக்கில் கட்டாக்காலி நாய்களினால் அப்பகுதி மக்களின் ஆடுகள்கடித்துக்குதறப்பட்டு வருகின்றன. கடந்த ஒரு மாதத்திற்குள் 2 ஆடுகள் கட்டாக்காலி நாய்களினால் கடித்துக் குதறப்பட்டு கொல்லப்பட்டுள்ளன என்றும் 35 ஆடுகளுக்கு மேல் கடிபட்டுக் காயமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-15)

உதயன்

## எச்சரிக்கையும் விளைவுகளும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கேணல் சங்கர் நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் மரணமாகியுள்ளார்.

ஆழ ஊடுருவிய ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொமாண்டோ அணியொன்று இயக்கிய கிளைமோர்க் குண்டில் சங்கரின் வாகனம் சிக்கியதாகவும் - கேணல் சங்கர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் -

விடுதலைப்புலிகளின் அறிக்கை கூறுகின்றது.

இந்தச் சம்பவத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தைக் குற்றஞ்சாட்டியுள்ள புலிகள் "இதுபோன்ற ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளால் எழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டும்" - என்றும் எச்சரித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் அண்மைக் காலத்தில் வெளியிடும் இரண்டாவது எச்சரிக்கை இதுவாகும்.

யாழ்.குடாநாட்டின் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக உளவுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்ற காரணத்தைக் கூறிக்கொண்டு கடந்த ஜூலை முற்பகுதியில் குடாநாட்டை அண்டிய புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்மீது ஸ்ரீலங்கா அரசுத்தரப்பு அகோர விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதும் -

அப்போது, இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டி நேரும் என்று புலிகள் எச்சரித்ததும் -

அதன் பின்னர் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின்மீது நடத்தப்பட்ட பெரும் கொமாண்டோத் தாக்குதலில் ஒன்றரை டசின் யுத்த விமானங்களையும், சில பயணிகள் விமானங்களையும் அரசுத்தரப்பு இழந்து, பெரும் பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டதும் - தெரிந்தவையே.

அந்த வரிசையில், இப்போது விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் அணியைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றிய கேணல் சங்கர், இலக்கு வைத்து விரிக்கப்பட்ட கிளைமோரில் சிக்கி உயிரிழந்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நெருங்கிய - நம்பிக்கைக்குரிய - தலைவர்களுள் கேணல் சங்கர் ஒருவர் என்பதும், அண்மையில் முட்டுக்கட்டை நிலையை அடைந்த நோர்வே சமாதான முயற்சிகளின்போது புலிகள் தரப்பில் முக்கிய பிரமுகராகச் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

கேணல் சங்கர் மீதான தாக்குதல் புலிகளை சீண்டிவிட்டிருப்பதன் காரணமாக விளைவுகள் குறித்து அவர்கள எச்சரித்திருக்கின்றார்கள். கேணல் சங்கர் கொல்லப்பட்ட சம்பவத்தால் ஏற்கனவே முட்டுக்கட்டை நிலையை அடைந்த நோர்வேயின் சமாதான முயற்சிகள் மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன என்று விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

புலிகளின் சீற்றமிக்க எச்சரிக்கையும், இந்தக் கொலைச் சம்பவம் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு என்று சுட்டிக்காட்டியிருப்பதும், சமாதானப் பேச்சு முயற்சிக்கு நிரந்தரத் திரையைப் போட்டுவிடுமோ என்ற கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

சமாதானத் தீர்வுக்காக அமைதிப் பேச்சை நடத்த வேண்டிய இரண்டு தரப்புகளுள் ஒன்றான ஸ்ரீலங்கா அரசு, பேச்சுக்கும் சமாதான முயற்சிக்கும் எதிரான போக்குடைய ஜே.வி.பியுடன் கைகோர்த்து, எழுத்து மூலம் உடன்பாடு கண்டு, ஜே.வி.பியின் முதுகில் சவாரி செய்ய அது கூறும் நிபந்தனைகளை ஏற்று, செயற்படுகின்றது. இதனால் பேச்சுக்கான வாய்ப்புகள் அருகிப் போயிருக்கின்ற நிலையில், கேணல் சங்கர் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய தகவலும், அதன் விளைவாக சமாதான முயற்சி பாதிக்கப்படும் என்ற புலிகளின் எச்சரிக்கையும் வெளியாகியிருக்கின்றன.

அமைதிப் பேச்சுகள் இப்போதைக்கு இடம்பெறமுடியாத ஒரு சூழலை நோக்கி நிகழ்வுகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன என்பதே யதார்த்தம்.

இணக்கப்பாட்டுக்கு மீள முடியாத ஒரு நிலையை நோக்கிச் செல்வதால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை சம்பந்தப்பட்ட தரப்புகள் உணர்ந்து கொள்வது நல்லது.

# நாயன்மார்கட்டுப் பகுதியில் பெரும்போக நெற்செய்கை

## விவசாயிகள் ஆயத்தப் பணியில் ஈடுபாடு

அரியாலை,செப்.28

அரியாலை, செம்மணி, நாயன்மார்கட்டுப் பகுதிகளில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த இரு நாள்கள் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகள் வயல்களை உழுது தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். உரிய வேளையில் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால், விவசாயிகள் ஆர்வத்துடன் தமது வயல்களில் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது.

இந்தப் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த வருடத்தில் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-17)

## வாதரவத்தையில் மருத்துவ முகாம்

தென்மராட்சி,செப்.28

புத்தூர் வாதரவத்தை கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினர், இப்பகுதியிலுள்ள மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

கண், இரத்தஅழுத்தம், சலரோகம், தொழுநோய், பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சங்கச் செயலாளர் எஸ். பத்மதாசன் தெரிவித்தார். (க-117)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.28

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் க.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜா, தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் என். யோகராஜன், கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் ஆகியோர் இந்த விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (க-7)

☆ ☆ ☆

வேம்படி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவில் யாழ்.பல்கலைக்கழக நிதியாளர் க.கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி பாக்கியலட்சுமி கனகரத்தினம் வழங்குவார். (க-ரி)

## நாட்டு நடப்பு

வாணி ரீச்சரோ சாளியில் ஓடிறா
வாமதேவன் ஏனெடி சயிக்கிளில் போகிறார்?
இனி அவ 'கிறேட்வன்' பிறின்சிபல் ஆச்சாம்
'உதயன்' பேப்பரில் போட்டிருக்கினமாம்
கணிசமாய் அவருக்கு தலை மொட்டையாச்சாம
கூடித்திரிய வெட்கமாய் கிடக்குதாம்
தனிமையில் விட்டிடத் தான் மிகத் தயங்கி
தாலிக்கு காவலாய் போகிறார் பின்னாலே

- *விகடகவி.*

# கண்ணி அகற்றாத பகுதிகளில் மீளக் குடியமர வேண்டாம்!

## யாழ்.மக்களுக்கு புலிகள் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,செப்.28

எதிர்காலத்தில் போர் மூளும் அபாயம் மிக்கதும், கண்ணிவெடிகள் அகற்றப்படாததுமான பிரதேசங்களில மக்களை மீளக்குடியமர்த்த எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு குடாநாட்டு மக்களைப் புலிகள் கேட்டிருக்கின்றனர்.

இருபாலையில் இடம்பெற்ற அமுக்கவெடிச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டிருக்கும் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்பான யாழ்.குடாநாட்டு மக்களே!

இன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின்கீழ் எமது பாரம்பரிய பூமியான யாழ்.மண்ணில் எமது மக்களுக்கெதிராக நிகழ்ந்துவரும் சம்பவங்கள் பெரும் வேதனையையும், சீற்றத்தையும் ஏற்படுத்துவனவாக உள்ளன. பாலியல் வல்லுறவு, காணாமற்போதல், கண்ணிவெடி அபாயமிக்க பகுதிகளில் மக்களைக் கொண்டு சென்று குடியேற்றுதல், மக்களை மனிதக்கேடயங்களாக்குதல், திட்டமிட்டு எமது கலாசார, பண்பாட்டு விழுமியங்களைச் சிதைத்தல் என ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்கள் நீண்டு செல்கின்றன. யாழ். குடாநாட்டில் ஸ்ரீலங்கா இராணுவம் நன்கு திட்டமிட்டு மறைமுகமாக மேற்கொண்டுவரும் சூழ்ச்சிமிக்க நடவடிக்கைகளால் பொதுமக்களின் உயிர்வாழ்வு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

கடந்த 24-09-2001 அன்று இருபாலைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அமுக்கக் கண்ணிவெடிக்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக கொல்லப்பட்ட வேதனையான சம்பவம் நடந்துள்ளது. 'ஓயாத அலைகள் நான்கு' நடவடிக்கையின் போது இருபாலைப் பகுதியில் பின்வாங்கத் தயாராக நின்ற ஸ்ரீலங்கா இராணுவம், அங்கு தனது பாதுகாப்பு அரண்களை அமைத்து, கண்ணிவெடிகளை விதைத்திருந்தது. அவ்விடங்களில் இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. அப்படியிருந்தும் இராணுவம் அப்பிரதேசங்களில் எதுவித முன்னெச்சரிக்கையுமின்றி மக்களைக் குடியேற்றியுள்ளது. தென்மராட்சிப் பகுதிகளில் இவ்வாறு விதைக்கப்பட்ட கண்ணிவெடிகளால் அங்கு மீளக்குடியேறிய மக்கள் பலர் பலியாகியுள்ளதுடன் பலர் தமது அவயவங்களையும் இழந்துள்ளனர். எதிர்காலத்தில் போர் மூளும் அபாயம் மிக்க - கண்ணிவெடிகள் அகற்றப்படாத - தென்மராட்சிப் பகுதிகளில் குடியேறவேண்டாம் என பல தடவை கேட்டுவந்துள்ளோம். மீள் குடியேற்றம், புனர்வாழ்வு என்ற பெயரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் அதன் அடிவருடிகளும் செயற்பாட்டால் பல அப்பாவிப் பொதுமக்கள் கண்ணிவெடி அபாயத்துள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கண்ணிவெடி அபாயத்துள் தள்ளி, எமது மக்களின் உயிர் வாழ்வை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ள ஸ்ரீலங்கா இராணுவம், மறுபுறம் எமது உயர்பண்பாட்டு கலாசார விழுமியங்களையும் திட்டமிட்டு சீரழித்து வருகின்றது. எமது இன்றைய இளம் தலைமுறையின் கல்வி வளர்ச்சி, தேசப்பற்று, போராட்ட உணர்வு ஆகியவற்றை மழுங்கடிக்கும் நோக்குடன் ஸ்ரீலங்கா இராணுவமும், அரச இயந்திரமும் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறாகப் பாலியல் வல்லுறவு, காணாமற்போதல், மக்களை மனிதக் கேடயங்களாக்குதல், திட்டமிட்ட கலாசார சீரழிவுகள், கண்ணிவெடி அச்சுறுத்தல் போன்ற திட்டமிட்ட மறைமுக இன அழிப்பு நடவடிக்கைகளையிட்டு மிகுந்த கவனத்துடன் செயற்படுமாறு யாழ்.குடாநாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். யாழ்.குடாநாட்டில் வாழும் எமது மக்களின் இழந்த கௌரவமும், சுதந்திரமான வாழ்வும் மீட்கப்பட்டு யாழ்.குடாநாடு ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விரைவில் விடுவிக்கப்படும்வரை எமது மக்களை மிகுந்த அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஐ)

# இளைஞர் கலாசாரப் போட்டி; வெற்றி பெற்றவர்கள் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அண்மையில் மாவட்ட மட்டத்தில் நடத்திய இளைஞர் கலாசாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**சாஸ்திரியப்பாடல் (தனி)**

முதலாமிடம் - வி.வடிவாம்பிகை (துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை), இரண்டாமிடம் - சோ.குமுதா கோயில் வீதி, நல்லூர்), மூன்றாமிடம் - மு.ஜெயானந்தவதி (வல்வெட்டித்துறை), தி.சந்திரமௌலீகர சர்மா (கோப்பாய் வடக்கு).

**அபிநய நடிப்பு (தனி)**

முதலாம் இடம் - ப.கேதீஸ் (கோயில் வீதி, மல்லாகம்), இரண்டாம் இடம் - ப.தங்கேஸ் (கோயில் வீதி, மல்லாகம்), மூன்றாம் இடம் - க.கர்மிலன் (நரியிட்டான், மல்லாகம்).

**குறு நாடகம்**

யாழ்.மத்தியகல்லூரி மாணவர்கள் (கரையைத் தொடாத பறவைகள்).

**பேச்சு**

முதலாம் இடம் - பா.பாலகோபி (வளாக வீதி, திருநெல்வேலி), இரண்டாம் இடம் - கி.ஜங்கரன் (காடியவளை, இளவாலை), மூன்றாம இடம் - சி.நந்தகுமார் (சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு).

**கிராமியப் பாடல் (குழு)**

சி.மலர்விழி (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

**கிராமியப் பாடல் (தனி)**

முதலாம் இடம் - த.சந்திரமலர் (அல்வாய் தெற்கு, வதிரி), இரண்டாம் இடம் - மு.ஜெயானந்தவதி (வல்வெட்டி, வல்வெட்டித்துறை), மூன்றாம் இடம் - லோ.யாழினி (அல்வாய் தெற்கு), செ.சிவகௌரி (இலந்தைக் குளம், கொழும்புத்துறை).

**பரத நாட்டியம்**

முதலாம் இடம் - ச.ஆனந்த ஜோதி (அம்மன் வீதி, கந்தர்மடம்), இரண்டாம் இடம் - ம.ரோகினி (கோயில் வீதி, நல்லூர்).

**அறிவிப்பாளர்**

முதலாம் இடம் - நா.சுகந்தி (இணுவில் மேற்கு, வட்டுவினி), இரண்டாம் இடம் - க.தர்மினி (கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), மூன்றாம் இடம் - ப.கேதீஸ் (கோயில வீதி, மல்லாகம்).

**புதிய நிர்மாணிப்பு நடனம் (குழு)**

முதலாம் இடம் - க.ஸ்ரீபாஸ்கரன் (புலோலி).

**ஓகன்**

முதலாம் இடம் - பூ.கருணைதாஸ் (ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு), இரண்டாம் இடம் - அ.அந்தனிற்றா (வெளிச்ச வீட்டு ஒழுங்கை, பருத்தித்துறை)

**கிராமிய நடனம் (குழு)**

முதலாம் இடம் - க.ஸ்ரீபாஸ்கரன் (மந்திகை, புலோலி)

**மிருதங்கம்**

முதலாம் இடம் - ப.சியாமா கிருஷ்ணா (கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம் - நா.மாதவன் (ஆலங்குளம், சண்டிலிப்பாய்), மூன்றாம் இடம் - க.தர்மசேகரம் (முகமாலை, எழுதுமட்டுவாள்).

**வயலின்**

முதலாம் இடம் - ப.சியாமா கிருஷ்ணா (கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம் - தி.ஸ்ரீசந்திரமௌலீகரசர்மா (கோப்பாய் வடக்கு) (க-4)

## நாளை

புரட்டாதி 13
சனிக்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 1.51 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் 3.15 வரை
சனிப் பிரதோஷ விரதநாள்
சுபநேரம்: 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கௌரவத்தைப் பெற்றிருப்பதை விட அதனைப் பெறத் தகுதி பெற்றிருப்பதே சிறப்புடையதாகும்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



கண்ணிவெடி ஆபத்தின்
ஆழம் நீ அறியாயோ?
எண்ணி நீ உணர்ந்து
கவனம் மிகக் கொள்ளாயோ?

# 'நான்' என்ற அகங்காரத்தை முதலில் பலியிடுவோம்!

உலகத்தில் பிறந்த அனைத்து ஜீவராசிகளும் வாழ்வதற்கு உரிமை உண்டு. அனைத்தும் இறைவன் படைப்புக்களே. இந்து தர்மம் இதனை மேலாக வலியுறுத்துகிறது. பஞ்மா பாதகங்களுள் மிகவும் கொடியது உயிர்க் கொலையாகும். "எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய்" என்கிறார் யோகர் சுவாமிகள். "கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிரும் கை கூப்பித் தொழும்" என்கிறது திருக்குறள். இன்று யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் இறை பெயரைக் கூறி உயிரினங்கள் பலியாக்கப்படுகின்றன. வேள்விகள், யாகங்கள் நடைபெறுகின்றன. நாளுக்கு நாள் கொல்களங்கள் புதிதாக முளைக்கின்றன. இது பற்றி சாதி சமய வேறுபாடின்றி மானிடப் பிறவிகளாகிய நாங்கள் சிறிது சிந்தித்தால் கொலை, மிருக வதையால் நாம் எத்துணை பாவத்தைச் செய்கின்றோமென உணரலாம். பெறுவதற்கரிய மானிடப் பிறப்பை எடுத்து எவ்வளவு இழிவான செயலைச் செய்கின்றோமென யோசித்துப் பார்ப்போம்.

### மிருகபலி

யக்ஞங்களும் யாகங்களும் மிக்க மதிப்புடைய வேள்வித்தீயில் புனிதப் பொருள்கள் அர்ப்பணம் செய்தும் சரியான முறையில் செய்யப்படும் யாகங்கள் அதற்குரிய பலனைத்

**ஞானக்கதிர்**

தந்தேயாகும். இது ஒரு மறுக்க முடியாத உண்மை. பழங்காலத்தில் இப்படிப்பட்ட யாகங்களைச் செய்வது வழக்கம். அந்த யாகத்தில் பிராணிகளைப் பலி தருவது வழக்கம். பிராணிகள் என்பது ஒரு சங்கேத மொழியே. வாயில்லாப் பிராணிகளைப் பலி தருவது நோக்கமல்ல. மக்கள் அவைகளின் வாழ்க்கையைத் தியாக குண்டலத்தில் முடிக்க வேணடும் என்பதில்லை. பிராணிகளே தியாக வாழ்வு வாழ்கின்றன.

ஆன்மீக மொழியில் பிராணி (பசு) என்றால் 'நான்' என்ற உணர்வைக் குறிக்கும். அதாவது 'நான்' என்ற அகங்காரத்தைப் பலியிடுதலே பலி என்று பொருள். இறைவனைப் பசுபதி கோவிந்தன் என்றும் அழைப்பார்கள். பசுபதி என்றால் (பசு-ஜீவன்) எல்லா உயிர்களுக்கும் தலைவன் என்று பொருள். கோவிந்தன் என்றால் பசுக்களை (ஜீவன்களை) ரட்சிப்பவன் என்று பொருள். பசுக்களை மேய்த்தல் என்னும் கண்ணனின் லீலை அனைத்து உயிர்களுக்கும் அவரே ரட்சகர் என்பதையே குறிக்கின்றது.

இன்று இறை தத்துவங்கள், சாத்திர விதி முறைகள் எல்லாம் அடையாளம்காண முடியாதபடி மாற்றப்பட்டுவிட்டன. தத்துவங்களுக்கும் செயல் முறைகளுக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளி தோன்றிவிட்டது. அகங்காரத்தை முற்றிலும் ஒழிப்பது மிகவும் சிரமமான செயல். அதனால்தான் மனிதன் வாயற்ற பிராணிகளான ஆடு, மாடு, கோழி போன்ற பிராணிகளைப் பலியாகத் தருகிறான்.

### மூக்குணங்கள்

ஒரு மனிதனிடம் தமோகுணம், ரஜோகுணம், சாத்வீககுணம் என்ற 3 குணங்கள் உள்ளன. மிகவும் கீழ்த்தரமான தமோ குணத்தின் அடையாளமே பிராணிகளைப் பலியிடுதல். உலகப் பற்றில் அகப்பட்ட மனிதன், அகங்காரம் என்னும் மிருகத்தைப் பலி தருவதுதான் சாத்வீக பாதை. அதுவே மீட்சிப் பாதை.

சில காலமாக நிறுத்தப்பட்டிருந்த மிருக பலி மீண்டும் சில கோயில்களில் வேள்வி என்ற பெயரில் கொல்களங்கள் அமைக்கப்படுவது மிக வேதனை தரும் விஷயமாகும். மக்களின் ஒரு சாராரின் இந்தப் பாவச் செயல்களுக்கு நமது வேதங்களில் ஆதாரம் உண்டு என இவர்கள் வாதிடுவதுதான் ஆச்சரியத்துக்குரியது. உலகத்திலுள்ள எந்த ஒரு மதமும் உயிர்க்கொலையை ஆதரிக்கவில்லை. ஒவ்வொருவரும் தமக்கேற்ற முறையில் மதங்களின் கொள்கைகளை மாற்றியதன் விளைவுதான் இது. இவ்வுலகில் அவதரித்த எந்த அவதாரமும் மிருக பலியையோ அல்லது வதையையோ செய்யச்சொல்ல வில்லை. அவதாரங்கள் போதிப்பது எல்லா உயிர்களிடமும் அன்பைச செலுத்து என்றே.

பகவான் கிருஷ்ணன் மிருக பலியைத் தடுக்கவும், உயிர்கள் அனைததிற்கும் இன்னா செய்யாமையையும், அகிம்சை நெறியையும் போதிப்பதற்கும் தனது தெய்வீக ஆற்றலின் ஓர் அம்சமாகப் புத்தபிரானை உலகத்திற்கு அனுப்பினார். புத்தரின் அவதார நோக்கம் ஓரளவு வெற்றி அடைந்த போதும், வேதங்களுக்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை. அடுத்ததாக ஆதிசங்கரர் அவதரித்தார். முப்பதிரண்டு ஆண்டுகள் வாழ்ந்த சங்கரர் வேதங்களின் தகுதியை நிறுத்தினார்.

முஸ்லிம்களது பெருநாள் ஒன்றில் இளங்கன்று ஒன்று பூமாலைகளாலும், தோரணங்களாலும் சோடிக்கப்பட்டு கொல்லப்படுவதற்காகக் கட்டப்பட்டுள்ளது. இதைக் கபீர் அவர்கள் சென்று நிறுத்தி, 'எங்களைப் படைத்த அல்லாதான் மிருகங்களையும் பறவைகளையும் படைத்துள்ளார். இந்தக் கன்றை ஏன் கொல்ல விரும்புகிறீர்கள்? அது உங்களுக்கு என்ன தீங்கு செய்தது? தயவு செய்து விட்டுவிடுங்கள்" என்று மன்றாடினார் கபீர். அனைவரும் சிறிது நேரம் அமைதியாக இருந்து யோசித்து, கன்றைக் கொல்வது கூடாது என ஒரு முகமாக ஒப்புக் கொண்டனர்.

இன்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் மீண்டும் பூமிக்கு, பகவான் ஸ்ரீசாயியாக அவதரித்துள்ளார். தெய்வீகக்

## மிருகவதை கொடியது! பசுவதை மிகக் கொடிது!!

யேசுபிரான் ஜெருசெலத்தில் கோயிலில் பறவைகளையும், புறாக்களையும் மற்றும் உயிரினங்களையும் மக்கள் பலியிடுவதைப் பார்த்து இரத்தம் சிந்தும் இச்செயலைக் கண்டித்தார். இதனால் ஆத்திரம் அடைந்த குருமார் "நாம் வணங்கும் தெய்வத்தை சினந்தணிப்பதற்காகச் செய்கிறோம்" என்றனர். ஆனால் அவர் அவற்றை எதிர்த்து உயிர்ப் பலியை நிறுத்துவதில் வெற்றி கண்டார். மேலும் யேசுபிரான் பின் வருமாறு கூறினார்: "நீ மிருகங்க



ளின் மாமிச சதைத்துண்டங்களை உண்பாயானால் அது உன்னுடைய சகோதரனுடைய சதைத்துண்டங்களை உண்பதற்குச் சமனாகும்" என்றார்.

புத்தபிரான் பிம்பிராச மன்னனின் யாகசாலைக்குச் சென்று, அங்கு அந்தணர்கள் மந்திரங்களை ஓதி, வெள்ளாடு ஒன்றைப் பலிபீடத்தில் கிடத்தியிருப்பதைப் பார்த்துப் பதை பதைத்து தீஷிதர் ஆட்டை வெட்டக் கத்தியை ஓங்க, குறுக்கே பாய்ந்து தடுத்து நிறுத்தினார். உயிரைப் பறிப்பது எல்லோருக்கும் எளிது. ஆனால் இறந்த உடலை எழுப்பமுடியுமா?

குணங்களுடன் அவதரித்த இவர், இம்முறை வேத கலாசாரத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் வந்துள்ளார். பகவான் சாயிபாபா தமது பிறந்ததின விழாவில் பக்தர்களிடம் ஒரு பரிசைக் கேட்டார். அது "சுவாமி சொல்கிறேன், இந்நாள் முதல் யாராகட்டும் இறைவன் பக்தன் என்று சொல்லுபவன் மாமிசம் சாப்பிடுவதை அறவே நிறுத்த வேண்டும்". காரணம் என்ன? இந்த மாமிசம் மிருகக் குணத்தை வளர்க்கின்றது. உணவு எப்படியோ அப்படியே மனம். மாம்பழம் சாப்பிட்டால் ஏப்பம் மாம்பழத்தைச் சார்ந்தே இருக்கும். ஆகவே முதலில் மாமிசத்தை நிறுத்த வேண்டும். மாமிசம் சாப்பிடுவதற்காக நீ ஒரு மிருகத்தைக் கொல்வது எத்தனை பாவம்? பஞ்சபூதங்களால் நிறைந்த மனிதன் அதே பஞ்ச பூதங்களாலான மிருகத்தை வதை செய்வது என்ன நியாயம்?

நான் சாயி பக்தன், நான் சிவ பக்தன், முருக பக்தன், இராம பக்தன், கிருஷ்ண பக்தன், பிள்ளையார் பக்தன் எனக் கூறிக்கொண்டு, "கோழிக் கறி" சாப்பிடுகிறீர்கள். நீ எப்படி உண்மையான பக்தனாக இருக்க முடியும்? நீ வெறும் அரக்கனே! உனக்கு எப்படி கடவுள் அருள் கிடைக்கும்? ஆகவே வெளிநாட்டவராயினும் சரி, உள்நாட்டவராயினும் சரி சுவாமியின் (பாபா) பக்தர்கள்

தொகுப்பு:
ம.சிவயோகசுந்தரம்

உடனே மாமிச உணவை நிறுத்த வேண்டும்.

பகவான் பாபாவின் இந்தப் பிறந்த நாள் வேண்டுகோளை ஏற்று 150 நாடுகளுக்கு மேலுள்ள கோடிக்கணக்கான பக்தர்கள் சைவ உணவு உணபவர்களாக மாறியதை யாவரும் அறிவோம். எமக்குக் கடவுள் அருள் கிடைக்க வேண்டுமாயின் இன்றிலிருந்து மாமிச உணவை நிறுத்தி மிருக வதையை தடைசெய்வோமாக! ★

# சுயாதீன ஆணைக்குழுக்களால் பெரிதாகப் பயன் கிட்டப்போவதில்லை

## அமைச்சர்கள் பட்டி, ஜயரத்ன கருத்து

கொழும்பு,செப்.28

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் திட்டங்களை அரசு என்றுமே கைவிடாது. சமாதானத்துக்கான முயற்சிகள் தொடர்ந்தவண்ணமேயிருக்கும்.

சிரேஷ்ட அமைச்சர்களான பட்டி வீரக்கோன், டி.எம்.ஜயரத்ன ஆகியோர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு வகைசெய்யும் 17 ஆவது அரசமைப்புச் சீர்த்திருத்தம் கடந்த திங்களன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது குறித்துக் கருத்து வெளியிடும்போதே இந்த அமைச்சர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதால் பெரிதாகப் பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை. எனினும் சமாதானத்துக்கான ஒரு முயற்சியாக இது கொள்ளப்படும்.

17 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டது போன்றே, அரசின் புதிய அரசமைப்பும் நிறைவேற்றப்படும். ஜே.வி.பியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றி பெற்றது போன்றே ஐ.தே.கட்சியுடன் நடத்தப்படும் பேச்சுக்களும் வெற்றி பெறும் என்ற எண்ணம் எமக்கு உண்டு - என்றனர். (உ-7)


## தெய்வீக ஸ்தலங்களில்



காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் மஹாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றபோது, மணிவிழா நாயகர் பேராசிரியர் அ.சண்முகநாதாஸுக்கு மூதறிஞர் பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்கள் பொன்னாடை போத்துக் கெளரவித்தபோது எடுக்கப்பட்ட படம். *(படம்:காரைநகர் செய்தியாளர்)*



வடலியடைப்பு புதரானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பத்து லட்சம் ரூபா செலவில் மின்இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மின் இணைப்பை வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும் ஆலய பிரதமகுரு நித்தியானந்தக்குருக்கள் திரிலோகநாதனுக்குப் பொன்னாடை போத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஐ-3)



அளவெட்டி ஸ்ரீ நாகவரதநாராயணர் ஆலயத்தில் திருவூஞ்சல் மண்டபத்தைச் சிறப்பாக வடிவமைத்த 'கட்டடக்கலைமணி' சீனிவாசகம் கலியுகவரதன், ஆலயபரிபாலன சபை உறுப்பினர் கங்கைவேணியனால் பொன்னாடை போத்துக் கெளரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் காணப்படுகிறார். (ஐ-ரி)



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் நடைபெற்றது. மீன்பிடிப்படகு போன்று அமைக்கப்பட்ட ஊர்தியில் திருச்சொருபம் பவனிவந்தபோது எடுக்கப்பட்ட படம். (ஐ-15)

# அமெரிக்கா மீதான தாக்குதல் ஸ்ரீலங்காவுக்குப் புகட்டும் பாடம்

**நேர்மையான, நீதியான அடிப்படையில் சமாதானம் உருவாக்கப்பட்டால் மாத்திரமே பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும். அமெரிக்கா என்றால் என்ன, மத்திய கிழக்கு என்றால் என்ன, ஸ்ரீலங்கா என்றால் என்ன இதைத் தவிர வேறு மாற்று வழி எதுவும் இல்லை என்கிறார் சிறந்த சிந்தனையாளரும், பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரிய. ஞாயிறு லங்கா தீபவில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த 11ஆம் திகதி அமெரிக்காவில் நியூயோர்க் மற்றும் வாஷிங்ரன் நகரில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரமான, நிந்தனைக்குரிய பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் தற்போது வரலாற்றில் இடம்பெற்றுவிட்டன. உலக சமாதானத் தினத்தன்றே இந்தத் தாக்குதலை மேற்கொள்வது என நாள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி யாராக இருப்பினும், இந்தத் தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டிய விதம் மாத்திரமன்றி தாக்குதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளும் அந்தத் தாக்குதல்களின் விசேட தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

இந்தக் கொடிய - மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டிப்பதற்கு நாம் இருமுறை சிந்திக்கத் தேவையில்லை. அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக

**தமிழில்: கஜனி**

இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட விமர்சனங்களில் முக்கிய தொனிப் பொருளாக அதாவது உலகில் பயங்கரவாதத்தை முற்றாக அழிப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்வு கூறப்பட்டது.

உலக பயங்கரவாதத்தின் கீழ் விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கி - விடுதலைப் புலிகளும் தோற்கடிக்கப்பட வேண்டும் என நியாயப்படுத்தி - அந்தக் கருத்தைப் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது. பல வானொலி சேவைகள் நடத்திய தொலைபேசிப் பேட்டிகளில் பங்குபற்றிய பலர் "எமது நாடு போன்ற நாடுகளில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு உதவிகளை வழங்கும் மேற்குலக நாடுகளுக்குத் தற்போது நல்லதொரு பாடம் புகட்டப்பட்டுள்ளது" - எனத் தெரிவித்தனர்.

தொலைபேசிப் பேட்டிகளில் பங்குபற்றிய ஒரு சிலர் வெளியிட்ட கருத்துக்களை அவதானிக்கையில், அமெரிக்க மக்களுக்கு ஏற்பட்ட இந்தத் துன்பியல் நிகழ்வு குறித்து மகிழ்ச்சியடையும் மக்கள், மத்திய கிழக்கு நாடுகளில் மாத்திரமில்லை ஸ்ரீலங்காவிலும் உள்ளனர் என்பது தெரிகிறது.

இதைவிட அமெரிக்காவில் தாக்குதல்கள் இடம்பெற்ற மறுதினம் ஸ்ரீலங்காவிலுள்ள அரச செய்தி ஊடகங்கள் மீண்டும் மீண்டும் ஒரு கருத்தை வெளியிட்டன. அதாவது அமெரிக்காவில் இந்தத் தாக்குதல்களை அடுத்து அரசும், எதிர்க்கட்சியும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்படுகின்றன எனத் தெரிவித்தன. எனினும் இந்தத் தாக்குதல்கள் குறித்து நாள் முழுவதும் தகவல்களை வெளியிட்டுக்கொண்டிருந்த சர்வதேச செய்தி ஊடகங்கள் இவ்விடயம் குறித்து முக்கியத்துவம் வழங்கவில்லை.

### அரசியல் ஆதாயம்பெற முயன்றன

நாடு எதிர்கொண்ட ஒரு துன்பியல் நிகழ்வின்போது இவ்வாறு அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவது என்பது வழமையே. எனவேதான் உலகச் செய்தியூடகங்கள் முக்கியத்துவம் அளிக்கவில்லை.

சிறிலங்காவிலுள்ள அரச செய்தியூடகங்கள் வழமைபோல அரசியல் ஆதாயம்பெற முயன்றனவே தவிர, அதற்கு அப்பால் தகவல்களை வெளியிடவில்லை.

மற்றுமொரு முக்கியமான வேறுபாட்டை அவதானிக்க முடிந்தது. அதாவது அமெரிக்கத் தாக்குதல்களின்போது கொல்லப்பட்டோரின் எண்ணிக்கையை அறிவதிலும், அதை வெளியிடுவதிலும் சிறிலங்கா அரச செய்தியூடகங்கள் எடுத்த அக்கறையை உலக செய்தியூடகங்கள் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் இருந்தே உலக செய்தியூடகங்கள், இடம்பெற்ற அனர்த்தங்கள் பற்றி நாட்கணக்காகத் தெரிவித்துக்கொண்டிருந்தன. இருப்பினும் அதற்கு அப்பால் சென்று அந்த ஊடகங்கள் கருத்துக்கள் எவற்றையும் தெரிவிக்கவில்லை.

அனர்த்தத்தின் தாக்கத்தை அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினர். புள்ளி விவரங்களின் அடிப்படையில் யுத்தத்தை நடத்திவரும் எமது வழக்கம் இந்த நிகழ்வின் போதும் தலைதூக்கிவிட்டது. உயிரிழந்தோரின் எண்ணிக்கையை விவரமாக எடுத்துக்கூற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

### இஸ்ரேலுக்குச் சார்பான போக்கே காரணம்

இந்தத் தாக்குதல்களின் பின்னணியிலுள்ள உண்மையான பிரச்சினைகள் குறித்து நாம் சற்றுக் கவனம் செலுத்துவோம்.

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்குச் சார்பான அமெரிக்காவின் கொள்கையே அமெரிக்காவுக்கு எதிராக அடிப்படை இஸ்லாமிய தீவிரவாதியான பின்லேடனையும், ஏனைய தீவிரவாதிகளையும் ஆயுத மேந்தும் நிலைக்குத் தள்ளியது.

பலஸ்தீன மக்களின் உரிமைகளை ராணுவ பலத்தால் அழித்துவரும் இஸ்ரேலிய நிர்வாகத்தை நடத்துவதற்கு அமெரிக்கா ஆண்டு தோறும் ஐந்து பில்லியன் டொலர்களை யுத்த உதவியாக வழங்குகிறது.

பலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பாக ஐ.நா.சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து மீறிவருகின்றன. கடந்த காலங்களில் கட்டுப்படுத்த முடியாத சர்வதேசப் பயங்கரவாதி போன்றே இஸ்ரேல் செயற்பட்டுவந்துள்ளது. இதன் எதிர் விளைவாகவே பலஸ்தீனப் பயங்கர வாதம் உருவானது.

பயங்கரவாதத்தை முறியடிக்க முனையும் எந்தவொரு சர்வதேச அமைப்பினதும் முதல் இலக்காக அமைய வேண்டியது இஸ்ரேலின் பிடியிலிருந்து பலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதாகவே அமைய வேண்டும். வெறுமனே பின்லேடனைத் தோற்கடிப்பதாக மட்டும் அந்த இலக்கு அமையக்கூடாது.

பலஸ்தீன விடயத்தில் மட்டுமன்றி ஈராக் விடயத்திலும் அமெரிக்கா நடந்து கொள்ளும் முறையானது

(10ஆம் பக்கம் பார்க்க)




# தென்னைகளைக் கருவறுக்கும் செவ்வண்டுகளின் தாக்கம்

தென்னைப் பயிருக்கு சேதத்தை உண்டாக்கும் மிகவும் பாரதூரமான வண்டு செவ்வண்டு ஆகும். தென்னையின் தண்டுப் பக்கதினூடு சென்று தாக்கத்தை ஏற்படுத்தி வட்டுப்பாகத்தைச் சாய்த்துவிடுகின்றது. இது பனைமரங்களையும் தாக்கி அழிக்கின்றது. தென்னையுடன் பனைமரம் உள்ள இடங்களில் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்



படும். ஈரலிப்பான பிரதேசங்களில் காணப்படும் சூழல்கூட இதன் பெருக்கத்துக்குச் சிறப்பாக அமைந்துவிடுகின்றது. இதன் பாதிப்பு தாவரம் முற்றாக அழியும்போதே தெரிய வரும்.

கருவண்டின் தாக்கமானது ஓலைகளை மட்டும் பாதிக்கின்றது. ஆனால் செவ்வண்டின் தாக்கமானது மரத்தை முற்றாகவே அழித்துவிடுகின்றது. எனவே மிகக்கூடிய கவனம் எடுத்துப் பாதுகாக்க வேண்டியது பயிர்ச் செய்கையாளர்களின் கடமையாகும். மேலும் தாக்கத்தை அவதானித்த வேளை மரத்தைப் பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கையானது பயனற்ற செயலாக அமைந்துவிடுகின்றது.

### செவ்வண்டு RED WEEVIL வாழ்க்கை வட்டம்

1. இது 4Cm நீளமும் 1Cm அகலமும் உடையது.

2. இதன் நிறம் செங்கபிலம் (Raddishbrown) கறுப்புநிற வரிக் கோடும் உண்டு. இதன் வாயுறுப்பு நீண்டு அதன் இருபக்கங்களில் உணா கொம்புகள் இருக்கும். அத்துடன் வலிமைபொருத்திய உடலமைப்பை உடையது.

3. பெண்வண்டானது ஆண் வண்டைவிட வித்தியாசமானது. ஆண் வண்டின் கால்களில் மயிர் காணப்படும்.

4. முதிர் வண்டுகள் கூர்போன்ற நீண்ட (Snout) வாயுறுப்பினால் பழங்கள், குரும்பைகள் போன்றவற்றின் சாற்றை உறுஞ்சிக் குடித்து உயிர் வாழும். இது 3-4 மாதங்கள் உயிர் வாழும்.

5. மனிதர்கள், மிருகங்கள், வேறு பிராணிகளால் ஏற்படுத்தப்படும் காயங்களில் முட்டை இடும்.

6. 5-15 வயதுடைய மரங்களே இதன் தாக்குதல் இலக்காகும்.

7. 3-4 மாத வயதுப் பருவகாலத்தில் 200-300 முட்டைகளை இடுகின்றது. இவை 0.01mm நீளமுடையன.

8. 3-5 நாளில் முட்டைகளிலிருந்து குடம்பி வெளியேறுகிறது. கரும் சிவப்பு தலைப்பகுதி CREAM வெண்ணை நிறமுடையது. பொரித்தவற்றில் 35 வீதமானவை இறந்துவிடுகின்றன. 65 வீதமானவை தரமானவை. வரண்ட காலங்களை விட ஈரலிப்பான காலத்தில் விரைவாக பொரித்து வெளியேறுகின்றன.

9. குடம்பியானது வளரவளர கரும் கபில நிறமான கடித்துண்ணும் வாயுறுப்பானது "சிபுகத்தினால்" இளையங்களைக் கடித்து உண்ணும். உடலானது வெண்ணை நிறம். உண்ணும் கழிவுகள் துவாரத்தினூடாக வெளியேறிக் காணப்படும். இப்பருவம் 55- 60 நாள்களாகும். இதன் நீளம் 6Cm ஆகும்.

**க.தனிநாயகம்**
**தோட்ட முகாமைத்துவப் பகுதி, பளை.**

10. தொடர்ந்து முதிர்ந்த இளையங்களை உண்டு கழிவுகளைக் கொண்டு 8Cm நீளமான கூட்டுப்புழு நிலையை அடையும் இப்பருவம் 7-14 நாள்களாகும். சில கூட்டுப்புழுக்களில இருந்து வண்டுகள் வெளியேற முடியாமல் இறந்துவிடும். இதற்குக் காலநிலை காரணமாகும். நல்ல சூழலில் துளைத்துக்கொண்டு வெளியேறும். பின்னர் கருக்கட்டல் செய்து முட்டையிடும்.

2. குடம்பிகள் இளையங்களை உண்டுகொண்டு மேல்நோக்கியே செல்லும் வட்டுப் பாகத்தை அடைந்த உடன் **(Cabbage Region)** மிகவும் மிருதுவான - இனிப்பான - பாகமாக இருப்பதால் கூட்டுச் சேர்ந்து தாக்கி மேற்கொண்டு செல்லும்.

இவ்வேளை தண்டின் வட்டுப்பாகத்தை அண்டிய 3 - 4 ஓலைகளுடன் கூடிய குருத்துப் பாகம் சாய்ந்து விழுந்துவிடும். வீரியம் கொண்ட மரத்தில் குருத்து மட்டும் அழிந்த நிலையில் காணப்படும். இடி மின்னல் தாக்கியபோது குருத்து மட்டும் பாதிப்படைந்து காணப்படுவதுபோல இருக்கும்.

### பாதிப்பை ஏற்படுத்தும் காலம்

அநேகமாக ஆடி மாதத்தின் பின்னரே இதற்குச் சாதகமான காலமாக இருக்கின்றது. வளிமண்டல ஈரப்பதன் முட்டைபொரித்து குடம்பி வெளியேறச் சாதகமாக அமைகின்றது. மேலும இக்காலத்தில் தாக்கம் ஆரம்பித்து குருத்துப் பாதிக்கப்படும்போது ஐப்பசி - கார்த்திகை மாதம் அளவிலேயே தாக்கத்தை இனங்காணக் கூடியதாக இருக்கின்றது.

### தோட்ட சுகாதாரம்

இளம் மரங்களில் உள்ள முறிந்த ஓலைகளை வெட்டும்போது மரத்துக்குக் காயம் ஏற்படாதவாறு வெட்டித் துப்பரவு செய்யவேண்டும். கூடிய பசளைப் பிரயோகத்தினால் அடிப்பாகத்தில் தண்டு மதத்து வெடித்த காயங்கள் மூலம் இது பரவ வாய்ப்பு உண்டு. இவற்றிற்கு கோல்தார் **(COLD TAR)** பூச வேண்டும்.

மாலை வேளைகளில் மரங்களை கூர்மையாக காது கொடுத்து அவதானிக்க வேண்டும். அப்போது 'கோர்... கோர்...' என்று கத்தும் சத்தம் கேட்டால், துளை காயங்கள் இருந்தால் அவற்றை வெட்டி அதனூடு கம்பி ஒன்றை விட்டு புழுக்களை வெளியே எடுத்தபின், சன்லைற் சவர்க்காரத்தைச் செறிவாகக் கரைத்துத் துவாரத்தினூடு நன்றாக ஊற்ற வேண்டும்.

தென்னை மரத்தில் காயங்கள் இல்லாதபோது செவ்வண்டுத் தாக்கத்தை ஏற்படுத்தாது. எனவே காயங்கள் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

### இரசாயன நாசினிக் கட்டுப்பாடு

மரத்தின் உட்புறத்தில் உணவு காண்பதால் அகத்துறுஞ்சும் மருந்துகளையே பாவிக்கவேண்டும்.

'மொன குரட்ட பொஸ்' அடங்கிய



நாசினிகளை தாக்கப்பட்ட பகுதியில் இருந்து மேல் பாகத்தில் துளை இடும் கருவியால் 10cm ஆழம் 60° மரத்துக்கு சாய்வாகத் துளைத்து அதில் ஓர் ஓலை மடலை வைத்து 10M.L (ஒரு மேசைக்கரண்டி) மருந்தைச் செலுத்தி களிமண்ணால் துவாரத்தை மூடிவிடவேண்டும்.

தற்போது சேலைன் பாய்ச்சும் உபகரணத்தைப் பாவித்தும் இலகுவாக மருந்தை உட்செலுத்தலாம்.

மருந்தானது விரைவில் கடத்தப்பட்டு, மரம்முழுவதும் பரவி இளையங்களை உண்ணும் குடம்பிகளுக்கு இரட்டை நஞ்சாகமாறி குடம்பிகளுக்கு அழிவை ஏற்படுத்தும். முற்றிய காய்கள் பிடுங்கியபின் சிகிச்சை செய்வது பாதுகாப்பான முறையாகும்.

கூட்டுப்புழு மருந்துக்கு அழியமாட்டாது. எனவே மீண்டும் ஒரு மாதத்தால் சிகிச்சை செய்வது நன்று.

☆

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லின தென்னம் பிள்ளைகள் 400 விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம், (புனித அந்தோனியார் கோயில் அருகில்) அல்லது M.தங்கராசா, சூளானை, சுன்னாகம். (92690)

வளர்ப்பு கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஒட்டுச் செவ்வரத்தை இனங்களும் உண்டு தொடர்பு: 40/17, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் பார்வையிடலாம்.) (92725)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 26 வயது, செவ்வாய்க்குற்றமற்ற சதயம் 4ஆம் பாதம், சைவபோசன பட்டதாரிப் பெண்ணுக்கு உயர்கல்வி பெற்று, பதவி வகிக்கும் பண்பான மணமகன் தேவை. ஜாதகக் குறிப்பு மற்றும் பூரணமான விரங்கள், விலாசத்துடன் தொடர்பு கொள்க. விள.இல. 1367 மே/பா உதயன். (92701)

## தேவை

புதிய Bridgestone 3.00 -17 முன் ரயர் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். சி.பொன்னையா, 91/7, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம். (92696)

## தவறிவிட்டது

இராசையா யோகச்சந்திரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091001724), ஊனமுற்றோர் அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாயி 'மெடிக் கிளினிக்', K.K.S றோட், சுன்னாகம் என்னும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (92703)

குழுதெணி, அல்வாய் வடக்கைச் சேர்ந்த இ.இராசரத்தினம் (ராசு) என்பவருடைய் மோட்டார் சைக்கிள் ஆவணம் **(M.D90 - 1938 290-M.D 90E. 1938389)** பருத்தித்துறை பிரதான வீதிக்கும் நாவலடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரகு மெக்கானிக் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். **(C/18417)**

முள்ளி வீதி, அரியாலையைச் சேர்ந்த செல்லையா நிக்ஸ்சன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0902043415) 24.09.2001 இல் கொக்குவிலுக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் அரியாலை இராஜேஸ்வரி வீதியிலுள்ள மகேந்திரன் கடையில் ஒப்படைக்கவும். (92720)

## தவறிவிட்டது

திருநெல்வேலி, நாவலடி லேனில் வசிக்கும் கணேஸ் தர்மகுலசிங்கம் என்பவரது தேசிய அ.அ. (இல. 681844325V), விசேட அ.அ. (இல. 0902014991) என்பன திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீதா ஸ்ரோர்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (92729)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் தேவரகசிய ஏட்டின் மூலம் தீராத நோய்களை நிதானமாகத் தீர்த்தல், அதிர்ஷ்டயோக பலன் அறிதல்,ஞாயிறு மட்டும் 8.30 - 3.00 வரை ஆடியபாத வீதி, சரஸ்வதி மில லேன், கொக்குவில் கிழக்கு. (92706)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

நாவலர் வீதியில் தங்க நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொலைத்தவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்புகளுக்கு மாவட்ட நில அளவைக் காரியாலயம், கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P 2412 (92731)

## வியாபாரி விடுதலை

தென்மராட்சி,செப்.28

அழகு சாதனப் பொருள்களுடன் 368 பென்டோர்ஜ் பற்றறிகள் எடுத்து வந்தபோது வல்லை சோதனைச் சாவடியில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வியாபாரி நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

பொலீஸார் வழக்கை வாபஸ் பெற்றதை அடுத்து பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சந்தேகநபரை விடுதலை செய்தார்.

இவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள், பற்றறிகள் ஆகியவற்றை வியாபாரியிடம் ஒப்படைப்பதற்காக எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

## ஜெயலத் வன்னிக்கு!

கொழும்பு,செப்.28

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தலைமையிலான 13 பேர் கொண்ட குழு ஒன்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்காக இன்று வெள்ளிக்கிழமை அங்கு செல்கின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி வரை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் தங்கி நிற்கும் இந்தக் குழு அங்கு பல மருத்துவ முகாம்களையும் நடத்த உள்ளது.

இதற்கென பெருந்தொகையான மருந்துப் பொருள்களையும் கண்ணாடிகளையும் அக்குழு எடுத்துச் செல்லவுள்ளது. (ம)

## பெண் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.28

காய்ச்சல் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு பெண் சிகிச்சை பலனளிக்காது மறுநாள் புதன்கிழமை அங்கு மரணமானார்.

வல்வெட்டித்துறை, உலகுட பிள்ளையார் கோயிற் பகுதியைச் சேர்ந்த வடிவேல் வசந்தாதேவி (வயது56) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஒரு கிழமைக்குமேல் காய்ச்சலால் பீடித்து தனியார் வைத்தியரிடம் சிகிச்சை பெற்றதாகவும், காய்ச்சல் மேலும் மேலும் அதிகரித்ததை அடுத்தே யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் அந்தப் பெண்ணின் உறவினர்கள் தெரிவித்தனர். (க-15)


வெளிவந்துவிட்டது!
விற்பனையாகிறது!!!

*தற்காலப் புவியியல்*

இலங்கை

(G.C.E. (O/L) மேலதிக பாடம)

☆ புதிய பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டது.
☆ புதிய விவரங்கள், புள்ளிவிவரங்களைக் கொண்டது.
☆ மாணவர்களுக்கு ஏற்ற முறையில், இனிய தமிழில்,எளிய நடையில் எழுதப்பட்டது.

ஆக்கியோன்: **த.தியாகராசா.**

(92728) எங்கும் கிடைக்கும்.


---

*சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்*

## முக்கிய அறிவித்தல்

அழிவுற்ற வணிக நிலையங்களின் புகைப்படம் எடுக்க விரும்பிய வணிகர்கள் மன்றில் பதிவு செய்யவும். **அத்தோடு** தங்களது அங்கத்துவத்தையும், உறுதி செய்யும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
*சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,*

(92716)

---

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1947 - 07 - 20

உதிர்வு 1987 - 10 - 16

**அமரர் கந்தசாமி சண்முகநாதன் (பேபி)**

(முன்னாள் உரிமையாளர், பாலா ஸ்போட்ஸ் கிளப் )

அன்பின் பிணைப்புகள் - அழியாது
அகிலத்தில் என்றென்றும்!

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,*

**இந்திரா குடும்பத்தினர்.**

*இராமலிங்கம் றோட்,*
*திருநெல்வேலி.*

(92707)

---

## நெஞ்சகலா நினைவில்...
## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 01 - 1944

மறைவு 21 - 09 - 1999

## கதிரவேலு வீரசிங்கம்

திதி: 28-09-2001

"ஆண்டிரண்டு போனாலும் போகுமோ உம் நினைவு
சிறப்புடன் நாம் வாழ இனியதொரு வாழ்வுதந்தீர்!
அன்பும் அறிவும் எமக்களித்து உலகினில் உயரவைத்தீர்
இன்று நீர் இல்லாமல் கலங்குகின்றோம் உம் நினைவில்"

உம் நினைவில் வாடும்
**மனைவி, மகள்.**

*சாவற்கட்டு வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(92726)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.வாமதேவன் ஜெயரட்ணம்

B.A. Dip.in.Ed.

எமது பாடசாலை அதிபர்

திரு.வாமதேவன் ஜெயரட்ணம B.A. Dip.in.Ed. அவர்கள் அதிபர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவர் தம் சேவையைப் பாராட்டும் அதேவேளை, அவர் தனது குடும்பத்துடன் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
*யா/கந்தர்மடம் சைவப் பிரகாசவித்தியாலயம்*
*கந்தர்மடம்.*

(92719)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 08 - 02 - 1931

மறைவு 29 - 08 - 2001

## அமரர் கந்தையா மாசிலாமணி (மணி)

(பிரபல புகையிலை வர்த்தகர்)

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே **மாசிலாமணியே**
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக் கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

**இன்று (28.09.2001) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

- குடும்பத்தினர் -

*ஆனைக்கோட்டை றோட்,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

(92677)

---

## நீங்காத நினைவுகளில்
## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 - 10 - 1935

மறைவு 09 - 10 - 2000

## அமரர் கந்தையா பரமநாதன்

(முன்னாள் வங்கி முகாமையாளர்)
*இராஜவீதி - நீர்வேலி.*

**திதி: புரட்டாதி மாத பூர்வபட்ச துவாதசி**
**28.09.2001 வெள்ளிக்கிழமை**

*அன்பின் இருப்பிடமாய்*
*அறிந்தோர் மனங்களிலே*
*ஆண்டொன்று போனாலும்*
*அகலா திருக்கின்றீர்!*
*என்றும் உங்களை எண்ணி எண்ணி*
*ஏங்கித் தவிக்கும் யாம்*
*கன்றிழந்த பசுபோல*
*கலங்குகின்றோம்!*
*அரசகேசரி ஆனைமுகன்*
*திருவருளாற் தங்கள்*
*ஆன்மா சாந்தி பெற அவன் தாள்*
*பணிகின்றோம்!*

- மனைவி, சகோதர - சகோதரியர்,
மைத்துனர் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள். (92669)

*இராஜ வீதி,*
*நீர்வேலி.*

# தமிழ் இயக்கங்கள் புலிகளுடன் சேர்ந்திருந்தால் தமிழர் உரிமைகள் எப்போதோ கிடைத்திருக்கும்

## அஞ்சலி நிகழ்வில் சுதந்திரக் கட்சிப் பிரமுகர் உரை

தமிழினத்தின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தி பின்னர் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள ஏனைய தமிழ் இயக்கங்களான ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ஈ.பி.டி.பி. ஆகியவை தமிழினத்தின் விடுதலைக்காக தற்போதும் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் நடத்தி வரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்தால் எமது இனத்தின் உரிமைகள் எப்போதே கிடைத்திருக்கும்.

மறைந்த முன்னாள் பிரதமர்கள் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர்களின் சிரார்த்த தினமான நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்டப் பணிமனையில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் பிரதி அமைப்பாளர் த. தேவகுலநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். கிளையின் உபதலைவர் ஆர். சௌந்தரநாயகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தேவகுலநாயகம் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கை இணைத்து தமிழ் மக்களுக்கு மாநில சுயாட்சியை அரசு வழங்க வேண்டும். பொ. ஐ. முன்னணி அரசில் இணைந்துள்ள சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் எமது நாடு அழிந்துவிடும். சிங்களமக்கள் மத்தியில் தமிழர் வாழவேண்டும். தமிழ்மக்கள் மத்தியில் சிங்களமக்கள் வாழவேண்டும் அதே போன்று இரு இனங்களைச் சேர்ந்தோரும் திருமண வாழ்க்கையிலும் இணையவேண்டும். அப்போதுதான் இந்நாட்டில் இனப்பிரச்சினை என்றொன்று இராது.

தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள், சிங்களவர் வாழும் இடங்களில் காணி வாங்கி பாதுகாப்பாக வாழ்கிறார்கள். ஆனால் சிங்களவர்கள் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கில் காணி வாங்கி வாழ முடியாமலுள்ளது

தென்னிலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எமது சுதந்திரக்கட்சியே பாதுகாப்பாக உள்ளது. சிங்களவரும் தமிழ் பகுதிகளில் வாழ்ந்தால் எத்தகைய மொழிப் பிரச்சினையும் ஏற்படாது என்பதை நான் தெளிவாகச் சொல்லி வைக்கிறேன்.

இலங்கையில் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதலாவது பெண்பிரதமராக இருந்தவர். ஜே. வி. பியின் தலைவராக இருந்து ஸ்ரீமாவோவின் ஆட்சிக்கெதிராகப் புரட்சி செய்து தோல்வியடைந்தவர் றோகணவிஜயவீர. இன்று எமது அரசின் தலைவி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் விசுவாசமான கட்சியாக ஜே. வி. பி. மாறி உள்ளது. அரசின் ஆட்சி நீடிக்க உதவி புரியும் கட்சியாக அது மாறியுள்ளது..

இதே போல விடுதலைப் புலிகளும் சந்திரிகாவுடன் சேர்ந்து எமது நாட்டில் சமாதானம் உருவாக உதவவேண்டும். புலிகளைத் தேசத்துரோகிகளாக் குவதோ அன்றி நாட்டைவிட்டுத் துரத்துவதோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நோக்கமல்ல. அவர்கள் தேர்தலில் போட்டியிட வேண்டும். ஜனநாயக நீரோட்டத்தில் புலிகளை இணைக்கவே எமது கட்சி முயல்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி எமது அரசின் ஆட்சியை அகற்றப் பல சூழ்ச்சிகளைச் செய்துவருகிறது.

இவ்வாறு தேவகுலநாயகம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு தலைமை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டத்துக்கான உப தலைவர் ஆர். சௌந்தரநாயகம் தெரிவித்ததாவது:

யாழ். மேயராக இருந்து அமரரான அல்பிரட் துரையப்பா, எமது யாழ்ப்பாணத்தைப் பல வழிகளிலும் முன்னேற்றினார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சி செய்தபோது யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கென்று பல்கலைக்கழகம் உருவானது. அல்பிரட் துரையப்பாவைப் போன்று எமது அமைப்பின் தற்போதைய அமைப்பாளராகச் செயற்படும் வேல்முருகு தங்கராசாவும் சிறப்பான சேவை புரிகிறார்—என்றார்.

இளைப்பாறிய உப அதிபர் ந. சின்னத்துரை, செயற்குழு உறுப்பினர் பி. ஜெயதாஸ், திருமதி சின்னையா சோதிமுத்து. தங்கவடிவேல் ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-51)

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் பெற்றோர் தினவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி கே. பி. எஸ். வரதராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ. இரவீந்திரனும் கௌரவ விருந்தினராக திரிசியன் சபையின் யாழ். முதல்வர் அருட்தந்தை றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைனும் கலந்து கொள்ளவுள்ளனர். (சு-ரி)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 28

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் மானிப்பாய்ப் பகுதியில் நடத்தப்பட்டு வரும் வளர்மதி முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வளர்மதி முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்வார்.

(சு-ரி)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி கோகிலா தவராசா

அவர்களின் தந்தையார்

**பெரியதம்பி செல்வநாயகம்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/18422)



## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி தம்பையா**

நீர்வேலி மேற்கு, கரந்தனை பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி தம்பையா நேற்று (27-09-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், தனலட்சுமி, பாலசுப்பிரமணியம், பரிமளம், ஞானசுந்தரம் (உரிமையாளர் லம்போதரன் ரேடஸ்), ஞானசேகரம், செல்வராசா (கொலன்ட்), விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கதிரவேலு, தனலட்சுமி, விஜயரட்ணம், காந்திமதி, சோதிமலர், இந்திரவதனி, சுந்தரலிங்கம், (முகாமையாளர், கிராமிய வங்கி உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகுமார் (சுவிஸ்), ஊர்மிளா, சிவானுஜா (ஆசிரியை யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), முருகானந்தன், சிவறாதிகா (பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), சந்திரவதனா (ஜேர்மனி), கனகேஸ்வரன், சந்திரமோகன் (கொழும்பு), ரவிமோகன் (யா/வ்யாவிளான் மத்திய மகாவித்தி.), அம்பிகா (ஆசிரியை, மருதானை முஸ்லிம் மகாவித்தியாலயம்), சுதானந்தன், அருந்ததி (கொலன்ட்), பாலச்சந்திரன், அஜந்தா, சுற்பகரூபன் (மொறட்டுவ பல்கலைக்கழகம், கொழும்பு), சாமினி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), நிசங்கன் (யா/இந்துக் கல்லூரி), நேருகா (யா/ இந்து மகளிர் கல்லூரி), பிரதீபராஜ் (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி), சிந்துஜா, பரணியா, கோகிலன் (யா/ மத்திய கல்லூரி), லக்சிதா (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி), கபிலன் (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி), யகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும், விதுசனன், சுஜீபன், சுலக்ஷன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-09-2001) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
த. ஞானசுந்தரம்
(மகன்)

'லம்போதரன் ரேடஸ்'
இல. 16 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(92728)


## சிறுவர், முதியோர் தின பேச்சுப்போட்டி

வலி. வடக்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள சிறுவர், முதியோர் தினவிழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை — மேற்படி விழாவை முன்னிட்டு பேச்சுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும் —

இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமது பெயர் விவரங்களைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் கேட்டுள்ளார். (க-7)

## திறப்பு விழா

யாழ். மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் இன்று பிற்பகல் 2.15 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ் பிரதம விருந்தினராகவும், மாநகர ஆணையாளர் கு. இராமலிங்கம், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு. சண்முகநாதன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க-7)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 28

வலிகாமம் வலய உடுவில் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் கலந்துகொள்வார்.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

### 12 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

### 16 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

(க-86)

★ ★ ★

வலிகாமம் வலய சங்கானை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் அராலி இந்துக் கல்லூரி.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

(க-86)

★ ★ ★

வலிகாமம் வலய சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி எதிர் சில்லாலை றோ. க. வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (க-86)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறும் 16 வயதுப் பிரிவுக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் எதிர் புத்தூர் விஷ்ணு வித்தியாலயம்.

★ நீர்வேலி இந்துக் கல்லூரி எதிர் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

★ இடைக்காடு ம. வி. எதிர் கோப்பாய் ம. வி.

(ஐ-3)

★ ★ ★

நல்லூர் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணி முதல கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் பெரியபுலம் ம. வி.

★ கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக்கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

★ கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் எதிர் அரியாலை பார்வதி வித்தியாலயம்.

★ கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் முத்துத்தம்பி ம. வி. (ஐ-3)

**தென்னிந்தியத் திருச்சபை - யாழ்.அத்தியட்சாதீனம்**

**அருட்பொழிவு வழிபாடு**

*நடத்துநர்:*
அதிவண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்
*பேராயர், யாழ். அத்தியட்சாதீனம்*

*குரு அருட்பொழிவு:* வண.B.தேவதாஸ்
(ஊழியன், சங்கானை)

*உதவி குரு அருட்பொழிவு:* திரு.I.இராஜ்குமார்
(ஊழியன், காந்திஜி கிராமம்)

நாளை (29.09.2001) சனிக்கிழமை முற்பகல் 8.30
பேராலயம், வட்டுக்கோட்டை

*அருளுரை வழங்குவோர்:* வண.(செல்வி) J.இரட்ணசிங்கம்
மெதடிஸ்த திருச்சபை, கட்டைவேலி.

*அனைவரும் வருக.*

வண.ஜி.நடராஜா
காரியதரிசி.

(C/18418)



**யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை**
**வல்வெட்டித்துறை**

**வருடாந்தப் பரிசளிப்பும்**
**பெற்றோர் தின விழாவும் - 2001**

இடம்:- யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை திறந்த வெளியரங்கு
காலம்:-2001-09-28 வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி

தலைவர்
திரு.த.தவேந்திரராசா
(அதிபர்)

பிரதம விருந்தினர்
நகரபிதா M.K.சிவாஜிலிங்கம்
(நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.க.இராஜதுரை
(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்)
திரு.S.சுப்பிரமணியம்
(அதிபர், யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்)
செல்வி ஞா.சின்னையா
(முன்னாள் ஆசிரியை, யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை)

அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர்,ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(C-18420)



**தெல்லி மாநகர் - பாலர் ஞானோதய சபை**
"திருவாதவூரடிகள் புராணம்"

**நூல்வெளியீட்டு விழா**

இடம்:- *சிவகடாட்சக் குருக்கள் இசையரங்கு, காசிவிநாயகர் தேவஸ்தானம்*
காலம்:- 30-09-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
தலைமை:- சிவகாமத் திவாகரன்
**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்** அவர்கள்
*(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் இணுவில்)*
பிரதமவிருந்தினர்:- **பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்** அவர்கள் *(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*

**நிகழ்வுகள்**

காலை 9.00 மணி: காசி விநாயகருக்கு விசேட ஆராதனைகள், சமயகுரவர்கள் விழா மண்டபத்தை அடைதல்.

1. தேவாரம்
2. சபைத் தலைவரின் ஆரம்பவுரை
3. வரவேற்புரை: **திரு.க.தயாளகேசரி அவர்கள்** (நிர்வாக உறுப்பினர்)
4. தலைமையுரை
5. அருளுரை: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** (நல்லை ஆதீன முதல்வர்)

'சபையின் ஐம்பத்தைந்தாண்டுச் செயற்பாடுகள்'
1. வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் அவர்கள்
2. திரு.அ.கோபாலகிருஷ்ணன் அவர்கள (முன்னாள் வங்கி முகாமையாளர்)

நூல் வெளியீடும் அறிமுக உரையும்:
1. பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் (தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
2. சைவப்புலவர் வ.செல்லத்துரை அவர்கள
3. திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள (உதவிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் வலயம் II)
4. பண்டிதை சிவபாக்கியம் பாலநாதன் அவர்கள
5. திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம் அவர்கள (முன்னாள் அதிபர்)

வாழ்த்துரைகள்:
1. திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்கள் (பிரதேச செயலர், செயலகம் வலி.வடக்கு)
2. திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்கள (தலைவர், பிரதேசசபை வலி.வடக்கு)

அச்சக அதிபர்களைக் கௌரவித்தல் (கௌரவிக்கப்படுவோர்)
1. திரு.ச.சண்முகநாதன் அவர்கள் (நீரஜா அச்சகம்)
2. திரு.சி.சர்வேஸ்வரன் அவர்கள் (சௌந்தரம் அச்சகம்)

சான்றிதழ்கள் வழங்கல்
நன்றியுரை: திரு.ப.சேயோன் அவர்கள் (செயலாளர்)
தேவாரம்

முன்னாள் மாணவர்கள், சபையின் அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவரும் சமுகந்தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பாலர் ஞானோதய சபை**
(காசிவிநாயகர் தேவஸ்தானம்)
வீணாக்கடவை, தெல்லிப்பழை.

சி.கணேசலிங்கக் குருக்கள் *(தலைவர்)*
(92724)
இ.இராதாகிருஷ்ணா, ப.சேயோன். *(இணைச் செயலாளர்கள்)*


# அமெரிக்கா மீதான......

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலை எதிர் நடவடிக்கையை மேற்கொள்ளும் அளவுக்கு நீதியற்ற செயலாகும். ஈராக் நாட்டின் நடவடிக்கைகளைத் தோற்கடிக்கும் நோக்கில் கடந்த 10 வருடங்களாக அமெரிக்கா, ஈராக் மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

ஈராக்கின் நிலைமையைக் கண்காணிக்க ஐ.நா.சபையால் நியமிக்கப்பட்ட குழுக்களின் பிரதிநிதிகள் அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை காரணமாக அந்நாட்டு மக்கள் அனுபவித்துவரும் வேதனைகள் குறித்து உலகிற்கு எடுத்துரைத்துள்ளனர். இருப்பினும் அமெரிக்கா தனது ஈராக் மீதான ஆக்கிரமிப்பு மனப்போக்கை மாற்றிக் கொள்ளத் தயாரில்லை.

### அமெரிக்கர்களின் நெஞ்சைத் தொடவில்லை

குறிப்பாக இந்தப் பொருளாதாரத் தடைகாரணமாக ஈராக்கிலுள்ள சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் போதிய உணவின்றி - போஷாக்கின்றி வாடி வதங்குவது அமெரிக்கர்களின் நெஞ்சத்தைத் தொடுவதாகத் தெரியவில்லை. இவ்வாறான நிலையில் தற்கொலைப் போராளிகள் ஈராக்கில் உருவாவது புதுமையான விடயமல்ல.

மத்திய கிழக்குத் தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகள் அடிப்படையில் தவறானவை. "ஜிகாத்" என்ற பெயரில் மதத்தின் பேரால் உன்மத்தமடைந்து தற்கொலைப் போராளிகளாக உருவெடுப்பதற்கான மனநிலையை உருவாக்கியது அமெரிக்கா அனுசரித்துவரும் யுத்த ரீதியான கொள்கையேயாகும்.

கடந்த 11ஆம் திகதி மேற்கொளளப்பட்ட தாக்குதல்களைப் புரிந்துகொள்ள, இந்தப் பின்னணித் தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் இஸ்லாம் மதத்தில் மதத்திற்காக உயிரை அர்ப்பணித்தால் இறைவனை அடையலாம் என்ற கொள்கையானது இந்த நிலைமைக்கு வழிவகுத்தது.

மேலும் மதத்திற்காகப் போரிட்டு உயிர் துறப்பது புனிதமானது எனக் கூறும் ஒரேயொரு மதம் இஸ்லாம் மதம் மட்டுமேயாகும். இன்றைய உலகில் பரவிவரும் பயங்கரமான அடிப்படைவாதம் முஸ்லிம் அடிப்படைவாதமாகும். பின்லேடனுக்கு அடைக்கலம் அளித்துப் பாதுகாத்துவரும் ஆப்கானின் தலிபான் அடிப்படைவாதிகள் இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

### தலிபானுக்கு உதவியது அமெரிக்காதான்

தலிபான் அடிப்படைவாதம் மனிதாபிமானத்திற்கு எதிராகக் கொடுமையாகச் செயற்படுகிறது. இருப்பினும் அவர்கள் இவ்வாறு சக்திமிக்கவர்களாக உருவெடுக்க அமெரிக்காதான் உதவியது என்பதும் உண்மையே. ஆப்கானில் கொம்யூனிஸ்ட் போக்கைக் கொண்ட ஆட்சியைக் கவிழ்க்க தலிபானுக்கு அமெரிக்கா நிதி மற்றும் யுத்த உபகரண உதவிகளை வழங்கியது.

இவற்றை எல்லாம் கருத்திற் கொள்ளும்போது கடந்த 11ஆம் திகதி அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களானவை பின்னணிகள் எவையுமின்றித் திடீரென மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அல்ல. திடீர்த் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான உடனடிக் காரணங்கள், சம்பவங்கள் எவையும் இருந்திருக்கவில்லை.

ஆப்கான் மீதோ அல்லது ஈராக் மீதோ தாக்குதல்களை மேற்கொண்டு அந்த நாடுகளிலுள்ள ஆட்சிகளை ஒழித்தாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடும் எனக் கூற முடியாது.

மத்திய கிழக்கிலுள்ள அனைத்து நாடுகள் மீதும் அமெரிக்காவால் போர் தொடுக்க முடியாது. மத்திய கிழக்கு நாடுகளைத் தனது ஆணையின் கீழ் கொண்டுவரவோ அல்லது அவற்றை அடிமை நாடுகள் ஆக்கவோ அமெரிக்காவால் முடியாது. தனது எதிரிகளைத் தனது நாட்டின் எல்லைக்கு வெளியே அப்புறப்படுத்த அமெரிக்காவால் முடியாது. அதே போல தனது அரசாங்கச் செயற்பாடுகளை அமெரிக்க எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தவும் அமெரிக்காவால் முடியாது.

### ராஜதந்திரம் தேவை

உலகமயமாதல் ஊடாக அமெரிக்கா தனது பொருளாதார மற்றும் அரசியல் ஆதிபத்தியத்தைத் தொடர்ந்து பேணுவதற்கு அந்த நாட்டுக்கு யுத்த ரீதியான ஆற்றலோ அல்லது வெற்றிகளோ மட்டும் போதா. இதற்கு ராஜதந்திரம் மற்றும் அரசியல் தந்திரங்கள் தேவை.

பயங்கரவாதம், பயங்கரவாதம் எனக் கூக்குரல் இடுவதற்குப் பதிலாக பயங்கரவாதம் உருவானதற்கான காரணங்களைக் கண்டறியாது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என்பது அமெரிக்கா போன்ற வல்லரசுக்குக் கூட இன்று இயலாத காரியமாகும்.

மத்திய கிழக்கில் நிரந்தரமான சமாதானத்தை உருவாக்க வேண்டுமாயின் அமெரிக்கா தனது வெளிநாட்டுக் கொள்கையில் அதற்கு அதி உயர் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை இந்தத் தாக்குதல்கள் வற்புறுத்துகின்றன. ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் யுத்த ரீதியான அணுகுமுறை ஒரு தற்காலிகமான திருப்தியை வழங்கினாலும் நீண்ட காலத்திற்கு அது அமெரிக்காவுக்கோ, உலகிற்கோ நற்பயனை விளைவிக்காது.

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. அந்தத தாக்குதல்களுக்கு உட்பட்டவர்கள் அனுதாபத்திற்குரியவர்கள். அதே நேரம் பயங்கரவாதம், மிலேச்ச நடவடிக்கைகளை ஒழிப்பதாயின் நேர்மையான, நீதியான அடிப்படையில சமாதானம் உருவாக்கப்பட்டால் மாத்திரமே அது நிறைவேறும்.

அமெரிக்காவில் ஆயினும், மத்திய கிழக்கில் ஆயினும், சிறிலங்காவில் ஆயினும் இந்த வழிமுறையைத தவிர வேறு மாற்றுவழி ஏதும் இருக்க முடியாது. ☆


**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யா/நயினாதீவு மகாவித்தியாலய செயற்பாட்டு அறை அமைத்தலுக்கு 10 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து, அந்நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாவை உடன் வழங்கி உதவியவர்களான,**



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்
**கே.என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமான
**கௌரவ கா.வே.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளருமான
உயர்திரு. **ந.மதனராஜா** (J.P.U.M)
அவர்களையும்



வேலணைப் பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.
**ந.கருணாகரகுருமூர்த்தி**(J.P.U.M)
அவர்களையும்

நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்.
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்,
நயினாதீவு.

(92721)



**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**கொக்குவில் மேற்கு மணியர்பதி**
**ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்**

மேற்படி ஆலய கட்டட புனரமைப்புக்கு நிதியுதவி செய்தமைக்கும், ஆலய வெளிப்புற வீதியைத் தார் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கும், ஆலயத்தினதும் பொதுமக்களினதும் தேவைகளுக்காக நீர்த்தாங்கியை அமைக்க நிதி ஒதுக்கியமைக்கும் -



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து சமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. **கே.வி.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளருமான
உயர்திரு. **க.மணிபல்லவராஜன்**
(நிஷாந்தன்)
அவர்களையும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (92723)
தேவஸ்தான பரிபாலனசபையும், இந்து இளைஞர் மன்றமும்.

# சேவை நலன் பாராட்டு

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

திரு.க.சோமசுந்தரம்
திரு.ஆ.சி.நடராசா
திருமதி ஜெ.அந்தோனிப்பிள்ளை

ஆகியோரின் சேவைகளைப் பாராட்டுகின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள்,
(92735) தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம்.

# நல்வாழ்த்துக்கள்

23.08.2001 இல் ஜெயந்தியுடன் இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணைந்து 27.09.2001 வியாழக்கிழமை தனது பிறந்தநாளைக் கனடாவில் கொண்டாடிய சாம்பசிவம் ஜனகனை மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்கூறுவோர்:
*நரச்சிமார்கோயிலடி,* தர்மராஜா குடும்பத்தினர்,
*யாழ்ப்பாணம்.* (92748) பாஸ்கரன் குடும்பத்தினர்.

We Serve

வாதரவத்தை
விக்னேஸ்வரா வித்தியாலயத்தில்
வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில்
உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவ முகாம்

*இடம்* :- விக்னேஸ்வரா வித்தியாலயம், வாதரவத்தை.
*காலம்* :- 30.09.2001. ஞாயிற்றுக்கிழமை காலை 9.30-12.30 வரை.
*மேற்படி முகாமில்.*

☆ கண் பரிசோதனை ☆ இரத்த அழுத்தப் பரிசோதனை
☆ பொதுவான நோய்கள் பரிசோதனை
☆ நீரிழிவுப் பரிசோதனை

*கண் பரிசோதனை*
லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ MJF
வைத்திய நிபுணர்களும், மருத்துவ பீட மாணவர்களும் இந்தப் பரிசோதனைகளை நடத்துவர்.
அனைவரும் வருக! பயன் பெறுக!

லயன் V.சின்னத்துரை J.P. லயன் த.திருநாவுக்கரசு
தலைவர். (C/18419) செயலாளர்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டது

## பயிற்சி அச்சுக் கோப்பாளர்

எமது சங்கத்திற்கு மேற்படி பதவிக்கு, பயிற்சி அடிப்படையில் பின்வரும் தகைமைகளுடன் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

க.பொ.த. (சாதாரணம்) ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் சித்தியும், அச்சக வேலை தெரிந்திருத்தலும், இயந்திர இயக்குநர், புத்தகம் கட்டுதல் போன்றவற்றில் அனுபவமும் இருத்தல்வேண்டும்.

வயது - 30 தொடக்கம் 45 வரை.

விண்ணப்பிக்க விரும்புவோர், விண்ணப்பங்களை 10.10.2001 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

*127, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* - பொது முகாமையாளர்.
*27.09.2001* (C/18424)

## வடமாநில தெங்குச் செய்கையாளர் சங்கம்
### தென்னந் தோட்டத்திற்கு வங்கிகளில் கடன்பெற்றோர் விவரம் கோரல்

தென்னந்தோட்ட உரிமையாளர்கள், தோட்ட அபிவிருத்திக்காக வங்கிகளில் கடன் பெற்றிருந்தால் அவர்களின் விவரத்தை, வங்கிப் பிரதேசத் தலைமை அலுவலகம் கோருவதால், பின்வரும் விவரங்களைத் தருமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

*01. உரிமையாளர் பெயர்:–*
*02. முகவரி:–*
*03. தோட்ட முகவரி ; விஸ்தீரணம்:–*
*04. கடன்பெற்ற வங்கிக்கிளையும், முகவரியும், கடன்தொகையும்:–*

(தயவுசெய்து தாமதியாது உடன் அனுப்பி வைக்கவும்)

பிரதேச செயலகம் மூலமாக கோரப்பட்ட தோட்ட உரிமையாளர் விவரங்களை உடன் பதிவுசெய்யவும்.

*104, 4ஆம் குறுக்குத்தெரு,* அ.நல்லதம்பி,
*யாழ்ப்பாணம்.* (C/18425) தலைவர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றும் திருமதி சிவாகரன் ஜெயசுதாகினியின் தந்தையார்

## சரவணமுத்து தர்மலிங்கம்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,* பிரதேச செயலரும்
*வடமராட்சி வடக்கு,* நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்,
*பருத்தித்துறை.* (92742) ஊழியர்களும்.


## சுகாதார ஊழியர் வலிப்பினால் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்பல்கலைக்கழக வளாகத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த நல்லூர் பிரதேச சபையைச் சேர்ந்த சுகாதார ஊழியர் ஒருவர் உழவு இயந்திரத்தில் இருந்து வீழ்ந்து படுகாயமடைந்தார்.

குப்பை ஏற்றிக் கொண்டிருந்த போது, வலிப்பு ஏற்பட்டதால் உழவு இயந்திரப் பெட்டியில் இருந்து நிலத்தில் விழுந்து படுகாயமடைந்த திருநெல்வேலியைச் சேர்ந்த இராசு சிவரூபன் (வயது 20) என்ற அவ்வூழியர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9-ரி)

## திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் சுவிஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வசிக்கும் ஜீவன் இயக்கிய "எச்சில் போர்வை", "நிழல் யுத்தம்" ஆகிய குறுந்திரைப்படங்களுடன், மேற்கு வங்க இயக்குநர் சத்தியஜித்ரே இயக்கிய "அபராஜிதோ" என்ற உபதலைப்புக்களுடன் கூடிய வங்க மொழித் திரைப்படமும் காண்பிக்கப் படும். (க-7)

## மத்திய கல்லூரி அதிபருக்கு பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையின் 54ஆவது அகவை நிறைவு விழா இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை அரங்கில் கல்லூரி ஆசிரியர், நலன்புரிச் சங்கத் தலைவர் டபிள்யூ.ஜெயசலன் தலைமையில் இடம்பெறவிருக்கின்றது.

ஆசியுரை, வாழ்த்துரை, பொன்னாடை போர்த்தல், தங்கப்பதக்கம் அணிவித்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-3)

## வவுனியாவில் மூவர் கைது!

கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுத் துறையினர் வவுனியாவில் வைத்து நேற்றுமுன்தினம் மூன்று இளைஞர்களைக் கைது செய்தனர்.

ஆசிக்குளத்தைச் சேர்ந்த ரஜனி காந்த் (வயது 24), வி.வசந்தகுமார் (வயது 20) மற்றும் முருகனூரைச் சேர்ந்த எஸ்.சுரேஸ்குமார் (வயது 23) ஆகியோரே கைது செய்யப்பட்டனர். (ம-164)


NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

இரசாயனவியல்
திரு.மகேஸ்வரன்

இன்று (28.09.2001) முதல் வழமையான நேர அட்டவணைப் படி சகல பிரிவுகளுக்குமான வகுப்புக்களும் நடைபெறும்.

2001 A/L
பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு
ஆரம்பம்:–
01.10.2001 திங்கள்
(92736) காலை 7.00 மணி.

ராஜா யாழ்ப்பாணம்
எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி, நம்பியார், நாகேஷ் மற்றும் பலர் நடிப்பில்
கலங்கரை விளக்கம்
(கலர்)
தினசரி :– 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.00 (பு.நே.)
(C/18413)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், மனிஷாகொய்ராலா, ரகுவரன் நடிப்பில்
முதல்வன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92733)

யாழ்ப்பாணம், தயா நகைப்பூங்கா
அனுசரணையுடன்
கோப்பாய், வானவில் விளையாட்டுக் கழகம் நடத்தும்
மென்பந்து கிறிக்கெற் சுற்றுப்போட்டி

★ விண்ணப்ப முடிவுதிகதி - 29/09/2001
★ அணி ஒழுங்கு தேர்வு - 02/10/2001
★ போட்டி ஆரம்பம் - 06/10/2001

பெற்ற விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி உடனடியாக உரிய இடங்களில் ஒப்படைக்கவும்.

(92740) வானவில் விளையாட்டுக்கழகம், கோப்பாய்.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நடராசா

(இளைப்பாறிய அதிபர் - வீமன்காமம், தெல்லிப்பழை)

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வட்டு.கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா நடராசா நேற்று (27.09.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தேவராசா, தேவமணி, காலஞ்சென்றவர்களான நவமணி, இராசமணி, சிவமணி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகாதீசன் (தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), திருமதி சா.தேவராணி (ஆஸ்திரேலியா), திருமதி ஶ்ரீ.லோகேஸ்வரி, சிறீகாந்தன் (கனடா), கேசவன் (ஓமான்), திருமதி க.இன்பரதி, பகீரதன் (கண்ணன் - தவம் இயந்திரவியல் தொழிலகம் - கோண்டாவில்), வசீகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செ.சாம்பசிவம் (ஆஸ்திரேலியா M.L.T.), திருமதி ச.மைதிலி, ஶ்ரீஸ்கந்தராசா (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை), திருமதி சி.கேதீஸ்வரி (கனடா), திருமதி கே.பகீரதி (இராமநாதன் கல்லூரி), ச.கனகரத்தினம் (சித்தன்கேணி), திருமதி ப.ரதிரஞ்சிதம் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), திருமதி வ.மீனாம்பிகை (கோண்டாவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜேந்தினி, சுகந்தன், மயூரிணி, சிவாஜினி, கோகிலன், ஜெனனி, சயந்தன், தயாநிதி, தயானி, கோவர்த்தனன், கோபிகா, ஶ்ரீராம், ஶ்ரீசங்கர் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2001) வெள்ளிக்கிழமை 2.00 மணிக்கு சித்தன்கேணியில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.கிழக்கு,சித்தன்கேணி.* (C/18427) தகவல்: பிள்ளைகள்.

## பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம்

(செட்டியார்) *(பெற்றோலியக் கூட்டுத்தாபன கணக்காளர்)*

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம் 24.09.2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஜானகி தம்பதியனரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா செட்டியார் (பிஸ்கால்) - மாணிக்கம் தம்பதியினரின் மருமகனும், பத்மநாதன், சிவலோகநாதன் (யாழ்.ப.நோ.கூ.ச.), இராஜகோபால், ராதாகிருஷ்ணன் (டோகா), புனிதவதி (சுவிஸ்), இந்திரவதி (சுவிஸ்), குணம், காலஞ்சென்ற குருபரன் ஆகி யோரின் அன்புத் தந்தையும், சிவகிருஷ்ணராசா (பென்சன் அலுவலர்-கணக்காளர்), குருசாமி (அராலி), தனலட்சுமி (அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற பேபி மற்றும் முத்துராணி (ஓமான்), காலஞ்சென்ற சறோசினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம் (ஜேர்மனி), இந்திரன் (சுவிஸ்), நித்தியலட்சுமி, மேனகா, மகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனார்த்தன் (பாபுஜி - டோகா), கௌசிகா (ஜேர்மனி), யசோதரன் (ஜேர்மனி), கௌசல்யா (ஜேர்மனி), ஸ்திரிபன் (ஜேர்மனி), ஐங்கரன் (சுவிஸ்), லபியன் (சுவிஸ்), தர்மளா, கேமபாலன், செந்தூரன், லக்ஷன், பிறேமளா, பிரித்தனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.09.2001 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.பத்மநாதன்,
*இல.64, விபுலானந்தர் றோட்,* சி.சிவலோகநாதன்,
*கொழும்புத்துறை,* சி.இராஜகோபால்,
*அரியாலை.* (92734) (பிள்ளைகள்)

## பண்டாரம் துரைச்சாமி (துரையர்)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரம் துரைச்சாமி (துரையர்) நேற்று (27.09.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், சின்னத்தம்பி, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகம்மாவின் அன்புக் கணவரும், கிருஷ்ணபிள்ளை, யோகேஸ்வரன் (மருதனார்மடம் கடை) அருந்தவம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2001) வெள்ளிக்கிழமை இணுவிலில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,* யோகேஸ்வரன்,
*இணுவில் மேற்கு,* கிருஷ்ணபிள்ளை.
*இணுவில்.* (C/18428) (மகன்மார்)

## மாரிமுத்து நாகலிங்கம்

மாவிட்டபுரம் விஸ்வகுலத்தைச் சேர்ந்த மாரிமுத்து நாகலிங்கம் நேற்று (27.09.2001) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் சாவித்திரியம்மா, சின்னத்தம்பி (மணியம்), செல்வராசா, காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் மங்களேஸ்வரி (கனடா), திருச்செல்வம் (ஆஸ்திரேலியா), குணேஸ்வரி (கனடா), கோபாலகிருஷ்ணன், பாலச்சந்திரன் (ஆஸ்திரேலியா), பத்மராணி ஆகியோரின் அன்புத் தகப்பனும் சுப்பிரமணியம், பரமேஸ்வரி, கனமணி, இரட்ணேஸ்வரி, சிறசபேசன், விஷேந்திரன் (கனடா), கலாராணி (கனடா), பத்மாவதி, தேவி (கனடா), குணசிங்கம் (லிபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*காளிகோயிலடி,* நா.சின்னத்தம்பி, நா.கோபாலகிருஷ்ணன்
*சங்கானை.* (92751) (மக்கள்)

# வவுனியாவில் கைதான மாணவன் கொழும்பில் வைத்து விடுவிப்பு

வவுனியாவில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட வவுனியா மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவனான தங்கவடிவேல் இன்பகரன் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான விசாரணைக்காக பிரஸ்தாப மாணவன் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப மாணவன் விடுதலை செய்யப்பட்ட தகவல் வவுனியாவுக்கு நேற்றுக் கிடைக்காததால், பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இன்பகரன் விடுவிக்கப்பட்டுள்ளதை அடுத்து மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு இன்று பாடசாலைக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்பட்டது. (உ-3-10)

## விடுதலை

கொழும்பு,செப்.28

விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி செய்த சந்தேகத்தின் பேரில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மன்னார் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் உட்பட நால்வர் மன்னார் மாவட்ட நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 13 ஆம் திகதி பொலீஸாரால் மன்னார் நீதிமன்றில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். (ஓ-10)

## சங்கர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பு மூலம் அவர்கள் [illegible] களுக்குப் பெருமை சேர்க்[illegible]கள். ஆனால் அதன் பின்னணியில் பல காரணங்கள் இருக்கக்கூடும்' என்றார் அவர்.

"புலிகள் தாங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டிருக்கலாம். அதை நியாயப்படுத்துவதற்காகவே முன்கூட்டி இத்தகைய குற்றச்சாட்டு அறிவிப்பை அவர்கள் வெளியிட்டிருக்கக்கூடும்" - என்றும் அவர் கூறினார். (உ)

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இன்பருட்டி, வியாபாரிமூலை, எரிஞ்ச அம்மன் கோயிலடி, சுப்பர்மடம், முனை, தும்பளை கிழக்கு, கற்கோவளம் ஆகிய பகுதிகளில் இருந்து மீன்பிடிக்கச் செல்லலாம் என்றும் -

இன்பருட்டி முதல் தொண்டைமானாறு வரையான பகுதிகளில் மீன்பிடிக்கத் தடை தொடர்ந்து இருக்கும் என்றும் -

படை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மேலும் கூறினர். (உ-3-117)

## இன்ரறக்ட் உறுப்பினருக்கு பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.ரோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்ரறக்ட் கழகங்களின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பாசறை நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பாசறையில் துறைசார் வல்லுநர்கள் பலர் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்க இருக்கின்றனர். (ஒ-3)

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். எனவே மத்திய குழு கூடும்வரை காத்திருக்க வேண்டி நேரலாம்.

ஆனால் இந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று வருமானால் அதை ஆதரித்து வாக்களிப்பது என்பதில் மறுபேச்சுக்கே இடமில்லை. கூட்டணியின் ஐந்து எம்.பிக்களும் ஒட்டுமொத்தமாக - எந்த வேறுபாடுகளுக்கும் இடமின்றி - நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்பதை அடித்துக் கூறி வைக்க விரும்புகிறேன் - என்றார் ஜோசப் பரராஜசிங்கம். (உ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டுள்ளனர்.

அரசுத் தரப்பில் உள்ள 15 எம்.பிக்கள் முக்கிய சமயத்தில் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாகச் செயற்படுவார்கள் என்று ஐ.தே.கட்சி எம்.பியான மஹிந்த சமரசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பாக பொ.ஐ.மு. அரசின் முக்கிய பிரமுகர்கள் சிலர் ஐ.தே.கட்சித் தலைமைப் பீடத்துடன் இரகசியப் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர் என்றும் -

அரசில் முன்னர் அமைச்சர்களாகப் பணிபுரிந்த சிலரும், ஏழு முன்னாள் பிரதி அமைச்சர்களும் ஒரு குழுவாக இயங்கி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க, மற்றொரு அரசுத் தரப்புக் குழு வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகிப்பதன் மூலம் அரசைப் பலவீனப்படுத்தும் என்றும் -

நம்பிக்கையாகத் தெரியவருவதாக 'கொழும்பு பேஜ்' இணையத்தளம் தெரிவித்தது. (உ-3)

### மத்திய வங்கிக் குண்டுவெடிப்புச் சம்பவம்:

# குற்றம் சுமத்தப்பட்ட இருவரின் ஒப்புதல் வாக்குமூலங்கள் ஏற்பு!

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு,செப்.28

கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரு தமிழ் இளைஞர்களிடமிருந்தும் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் செல்லுபடியானவை என்று கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இரு இளைஞர்களும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டே வாக்குமூலங்கள் பெறப்பட்டதாகத் தெரிவித்து, அதனால் அவற்றை அவர்களுக்கு எதிரான ஒப்புதல் வாக்குமூலங்களாக ஏற்கக்கூடாது என்று அவர்கள் சார்பில் வைக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது.

வாக்குமூலங்கள் சித்திரவதை செய்யப்பட்டே பெறப்பட்டனவா என்பது குறித்து நடைபெற்ற 'வொயர் டயர்' விசாரணையின் முடிவில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சித்திரவதை செய்யப்பட்டமை நிரூபிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் தெரிவித்தது.

இனித் தொடர்ந்து இந்த வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் மூல வழக்கின் விசாரணையை நீதிமன்றம் தொடரவிருக்கின்றது.

அந்த விசாரணைகள் அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இந்த வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகியோர் உட்பட 14 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (உ-10)

## தலைவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

கேணல் சங்கரின் பூதவுடல் வட்டக்கச்சி, விஸ்வமடு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. மக்கள் அஞ்சலியின் பின்னர் அங்கு அஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெற்றன.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் நடந்த கூட்டத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நீர்ச்சுடரையும் சங்கரின் துணைவியார் ஈகைச்சுடரையும் ஏற்றினர்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை வீரவணக்க உரையை நிகழ்த்தினார். (உ-3-10)


நீங்கள் எதிர்பார்த்த
கலைக்கூடு
A/L 2002/2001 DAY
'பங்குடமை பயிற்சி நூல்' தொடர்பான போதனை வகுப்புகள் ஆரம்பம்
❖ நிரு கல்வி நிலையம் நாளை 8.30 a.m.
❖ NEWS CIENCE COLLEGE நாளை மறுதினம் 3.30 p.m.
❖ SHAMROCK செவ்வாய் 3 p.m.
ஆசிரியர்: S.குமா
B.Com. (Hons) (Acc.Spl.)
(92747)

NEW SCIENCE COLLEGE
பௌதிகவியல்
Radiation
(கடும் கதிர்ப்பு)
By:- R. குகன் (B.Sc.)
சனி, ஞாயிறு - 6.00 a.m.
ஆரம்பம்:-
நாளை (29.09.2001) சனி.
(92717)

நாவலர்
ஆசிரியர்
A/L 2002
Paper Class
Tue., Wed., Fri. 5.00 p.m.
Chemistry
திரு. அன்பு
(92746)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் இணுவில்
DAY CLASS
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
யாழ்ப்பாணம் - 01-10-2001 திங்கள் 8.00 (மு.நே.)
இணுவில் - 02-10-2001 செவ்வாய் 8.00 (மு.நே.)
(92628)

BEACON
(English Literature)
G.C.E. (O/L) மாணவர்களுக்கும் ஆண்டு - 9, 10 மாணவர்களுக்கும்.
காலம்:- 30.09.2001
காலை:- 7.00 மணி
ஆசிரியர்:-
K. சுப்பிரமணியம்
(92737)

IBMS இன்
புலமைப்பரிசில் பரீட்சை 2001/2002
மேற்படி பரீட்சைமுடிவுகள் தனித்தனியே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்த காரியாலயத்தில் அல்லது தலைமைக் காரியாலயத்திற்கு வந்து பெறுபேற்றினை பார்வையிடலாம்.
2001/2002 கல்வியாண்டிற்குரிய வகுப்புக்கள் எதிர்வரும் 29/09/2001 (சனிக்கிழமை) ஆரம்பமாகும். எனினும் அநேக பெற்றோர்களினதும் மாணவர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க பதிவுசெய்யும் திகதி 29/09/2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
Note:- A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரிய (September SCII III Batch)வகுப்புக்களும் 29/09/2001 அன்றுஆரம்பமாகவிருப்பதால்29/09/2001ற்குமுன்னர் தமது நேரத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளவும். SCII III Batch புலமைப்பரிசிலில் தோற்றி இது வரை பதிவு செய்யாத மாணவர்களும் பதிவு செய்து கொள்ளவும்.
Head Office
IBMS
[Affiliated to Barrington University of USA]
No.701 K.K.S Road,
Jaffna. Phone: 021-3165
Branches
NMMV Road, Nelliyady.
Main Road, Chankanai.
IBMS IT EDUCATION FOR THE NEW GENERATION

முக்கிய அறிவித்தல்
தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த இரசாயனவியல் வகுப்புக்கள் வழமைபோல், வழமையான நிறுவனங்களில் உடனடியாக ஆரம்பமாகின்றன.
CHEMISTRY
திரு.அன்பு
(92744)

A/L - 2002
DAY CLASS
ஆரம்பம்:
ஒக்ரோபர் 01
காலை 8 மணி
D.M.I
யாழ்நகர்.
(C/18363)

மேலும் பிரிவுகள் ஆரம்பம்
1. Diploma in MS Office
2. Diploma in Computer Management
3. Diploma in Desktop Publishing
4. E-mail, Internet
& MS Word, MS Excel
CorelDRAW
Photoshop as Modules
Start from 30-09-2001
For Further Details
STP is Easy Solution for your Future
No:54A, Palaly Road, Jaffna. T.P: 2674

Computer Courses
மேலதிக பிரிவுகள் ஆரம்பம் 30.09.2001

| பாடநெறி | காலம் (மாதங்களில்) | முழுமையான பயிற்சிக் கட்டணம் |
|---|---|---|
| Diploma in MS Office | 5 | 1,000/= |
| Diploma in Computer Programming | 8 | 2,500/= |

3.9.2001 ஆரம்பிக்கப்பட்ட டிப்ளோமா கற்கை நெறிகளுக்குரிய பிரிவுகள் அனைத்திற்குமான அனுமதிகள் பூர்த்தியடைந்த நிலையில் மேலதிக அனுமதிகள் 16.09.2001 முதல் நிறுத்தப்பட்டிருந்தன. அனேக மாணவர்களினதும் பெற்றோர்களினதும் வேண்டுகோள்களுக்கு இணங்க மேற்படி டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் 30.09.2001 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
IIS
Institute of Informatics Studies
No. 100, Clock Tower Road, Jaffna.
☎ 021-2831 Email


## மரண அறிவித்தல்

### சவிரிமுத்து பிறவுண் கிறிஸ்ரியன்

(வேளாங்கன்னி ஸ்ரோர்ஸ் - லாவனியா இன்டஸ்றீஸ் உரிமையாளர்)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் இல.783, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும்கொண்ட சவிரிமுத்து பிறவுண் கிறிஸ்ரியன் நேற்று (27.09.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - முத்தம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் திரேசா சூரியகுமாரியின் அன்புக் கணவரும் மாறன் (வசந்தாஸ் ஸ்ரோர்ஸ்), தனக்குமார் (All Ceylon Distributors), நர்சன் (கொழும்பு), மனோசுதன் (புனித பத்திரிசியார் கல்லூரி), ஜெனகன் (யாழ்.மத்திய கல்லூரி), திலகன் (யாழ்.மத்திய கல்லூரி), லாவனியா (திருக்குடும்ப கன்னியர்மடம் - ஆங்கிலம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கிறேஸ்லைலா (ஜேர்மனி), அன்ரன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் மரீனாமாலினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சூரியகுமாரி
(மனைவி)

T.P:- 021-2841

(C/18431)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.